பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 09 வியாழக்கிழமை (23-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:179

# சீரழிவுச் செயல்களைப் புரிவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்!

## விடுதலைப் புலிகள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,மே23

**எமது கலாசார, பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கின்ற உரிமை இங்கே வாழ்கின்ற எவருக்குமே இல்லை. அவ்வாறு சிதைப்பதை அனுமதிக்கவும் முடியாது. தனிப்பட்ட சிலரது நன்மைக்காக ஒட்டுமொத்தமான மக்களின் வாழ்வைச் சீரழிக்க முடியாது. எனவே, தகாத வேலைகளில் ஈடுபடுவோர் அதனை நிறுத்தாத பட்சத்தில் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.**

**தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறையினர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.**

இது தொடர்பாக நேற்று விடுக்கப்பட்ட ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

உலகத்தில் உருவாகியுள்ள உயிரினங்களுள் மனிதன் தனித்துவமானவன். விலங்குகளிலிருந்து மனிதர்களை வேறுபடுத்திப் பார்ப்பது அவர்களுடைய செயற்பாடுகளை வைத்தே. சிந்திக்கும் ஆற்றல், பகுத்தறியும் ஆற்றல், முடிவெடுக்கும் ஆற்றல் என்பனவற்றைக் கொண்டவனாக மனிதன் இருப்பதால் அவனால் பௌதிக, பண்பாட்டு அம்சங்களைத் தனக்கு இசைவாக மாற்றமுடிகிறது. மனித வாழ்வின் வாழ்க்கைமுறையினூடு பெறப்படுகின்ற அனுபவங்களிலிருந்து பெறப்படுகின்ற உன்னதவிடயங்கள் மனிதர்களின் கலாசார, பண்பாட்டு விழுமியங்களாகும். ஓர் இனத்தின் தனித்துவத்தைத் தீர்

(02ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்ட

## 150 ஆபாசத் திரைப்பட பிரதிகள் மக்கள் முன்பாக அழிக்கப்படும்!

யாழ்ப்பாணம்,மே23

குடாநாட்டில் விடுதலைப் புலிகளின அரசியல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆபாசப்படங்களின் வீடியோ பிரதிகள் நாளைமறுதினம் சனிக்கிழமை இரு இடங்களில் வைத்து தீயிட்டு அழிக்கப்படவிருக்கின்றன.

சமூகவிரோதச் செயல்களைத் தூண்டும் வகையில் ஆபாசப் படங்கள் மினி திரையங்குகளில் காட்டப்படுவதாக பொது அமைப்புக்கள் தெரிவித்த முறைப்பாடுகளையடுத்து - குடாநாட்டில் ஆபாசப்படப் பிரதிகளை வைத்திருப்பவர்கள் அவற்றைத் தம்மிடம் ஒப்படைக்கக் கோரி காலக்கெடு ஒன்றை விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விதித்திருந்தது. இதன்படி இதுவரை சுமார் நூற்றியைம்பது வீடியோ பிரதிகள் விடுதலைப் புலிகளின் அரசியல் துறையிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீடியோப் பிரதிகள் நாளை மறுதினம் காலை 10 மணிக்கு யாழ்.

(10ஆம் பக்கம் பார்க்க)

படையினர் வெளியேறாததை ஆட்சேபித்து

## வடமராட்சியில் மாணவர்கள் இன்று எதிர்ப்பு நடவடிக்கை!

வடமராட்சி கிழக்கு,மே23

பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறாததை ஆட்சேபித்து வடமராட்சியில் இன்று பாடசாலை மாணவர்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை ஆகியவற்றின் கல்விச் சமூகத்தினரின் ஏற்பாட்டில் இந்த எதிர்ப்பு நடவடிக்கை இடம்பெறும்.

ஹாட்லிக் கல்லூரியின் நுழைவாயில் அருகே அமைந்துள்ள சோதனைச்சாவடிக்கு முன்பாக இன்று காலை 9 மணிமுதல் 11மணிவரை மாணவர்கள் மறியற்போரில் ஈடுபடுவர். வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏனைய பாடசாலைகளின் மாணவர்களும் இப்போராட்டத்தில் பங்குகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ-182)

## 'ஹெலிரூர்ஸ்' விமான சேவை இந்த மாதத்துடன் நிறுத்தம்!

யாழ்ப்பாணம்,மே23

இரத்மலானைக்கும் பலாலிக்கும் இடையில் விமானப் படையின் 'ஹெலிரூர்ஸ்' நிறுவனம் நடத்தி வரும் பயணிகள் விமான சேவை எதிர்வரும் முதலாம் திகதியுடன் நிறுத்தப்படவிருக்கின்றது என்று அந்நிறுவனத்தின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

விமான சேவையில் பயணம் செய்வதற்காகத் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுப் (Return Ticket) பயணச்சீட்டுப் பெற்றவர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் யாழ். அலுவலகத்துக்கு வந்து பயணத்துக்கான ஒழுங்குகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் -

விரும்புபவர்கள் தமது பயணச் சீட்டை ஒப்படைத்து அதற்கான பணத்தை மீளப்பெற வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டுக்கான தரைப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து விமானம் மூலம் வெளியிடங்களுக்குச் செல்லும பயணிகளின் எண்ணிக்கை வெகுவாக வீழ்ச்சி கண்டிருப்பது தெரிந்ததே.

(ஐ-3)

## ஜூன் இறுதியில் பேச்சு; பிரதமர் ரணில் தகவல்

கொழும்பு,மே23

அரசு - புலிகள் நேரடிப் பேச்சுக்கள் ஜூன் மாத இறுதியில் நடைபெறும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றிரவு பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் குறித்து பிரதமர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சமாதானப் பேச்சுக்கான திகதிகள் நிர்ணயிக்கப்படாதுள்ளபோதிலும் பேச்சுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கென நோர்வேக் குழுவொன்று இந்தவார இறுதியில் இலங்கை வரவுள்ளது.

இந்தக் குழுவினரின் வருகையைத் தொடர்ந்து பேச்சுக்கான திகதி நிர்ணயிக்கப்படும் - என்றார் அவர்.

இதேவேளை -

தீவுப்பகுதிகளுக்கு பகல் வேளைகளில் விடுதலைப் புலிகள் செல்லவும், அரசியல் பணிகளில் ஈடுபடவும் கொள்கை அளவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ பி.பி.ஸிக்குத் தெரிவித்துள்ளார்.

(ஐ-எ-12)

## லண்டனில் இருந்து பாலசிங்கம் வார இறுதியில் சுவிஸ் செல்கிறார்

### சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய விஜயமா?

லண்டன்,மே23

தற்சமயம் லண்டனில் தங்கியிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் அந்த அமைபபின் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் இவ்வார இறுதியில் சுவிற்ஸர்லாந்துக்கு விஜயம் செய்கிறார்.

சுவிஸ் தமிழ்ச் சமூகத்தின் ஏற்பாட்டில் அங்கு இடம்பெறவுள்ள மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் பாலசிங்கம் உரையாற்றவுள்ளார். சமகால அரசியல் நிலைமைகள், ஸ்ரீலங்கா அரசுடனான சமாதான முயற்சிகள் பற்றி 'நெருப்பாய் இருப்பாய் தமிழா!' என்ற தலைப்பில் அவர் அங்கு சிறப்புரையாற்றுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் -

சுவிஸ் நாட்டின் அதிகாரபூர்வத் தரப்பில் இருந்து விடுக்கப்பட்ட ஓர் அழைப்பை அடுத்தே பாலசிங்கம் அங்கு விஜயம் செய்கிறார் என்று ஐரோப்பிய தமிழ் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கடந்த

(10ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



தட்டிக் கேட்க ஆள் வேனும் பாருங்கோ...

## பாலசிங்கத்தின் முறைப்பாட்டுக்கு அரசின் பதில் பெற்றுத்தரப்படும்

### நோர்வே குழுவினர் உறுதிமொழி

லண்டன்,மே23

நம்பிக்கையைக் கட்டி வளர்ப்பதற்கு மாறாக அதைத் தகர்க்கும் விதத்தில் அரசின் செயல்கள் அமைந்துள்ளதாக நோர்வே அனுசரணைக்குழுவிடம் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முறையிட்டிருக்கிறார்.

அவரது முறைப்பாட்டை வெகு விரைவில் இலங்கை அரசின் கவனத்துக்கு கொண்டு வருவதாகவும் அரசின் பதிலை உடனுக்குடன் தெரிவிபபதாகவும் நோர்வே குழு உறுதியளித்திருக்கிறது.

நோர்வே அனுசரணைக் குழுவினர் நேற்று அன்ரன் பாலசிங்கத்தை அவரது இல்லத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தியது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி 90 நாள்களாகியும் அந்த உடன்படிக்கைப்படி நடக்கவேண்டிய எத்தனையோ காரியங்கள் இன்னும் நடைபெறவில்லை என்று பாலசிங்கம் சுட்டிக்காட்டினார். (ஐ-3)

## புலிகள் இயக்க உறுப்பினரின் கைதை ஆட்சேபித்து மக்கள் ஆர்ப்பாட்டம்!

### வானை நோக்கி அதிரடிப்படையினர் சூடு

அம்பாறை,மே23

அம்பாறை மாவட்டம் - திருக்கோயில் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் நேற்றுக்காலை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளின் பின்னர் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சாரதி அனுமதிப்பத்திரம், பதிவு இலக்கம் இன்றி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியதாகக்கூறி கோபன் என்ற விடுதலைப் புலி உறுப்பினரைக் கைது செய்த அதிரடிப் படையினர் பின்னர் அவரை அக்கரைப்பற்று பொலீஸார் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். அவர் பின்னர் பத்தாயிரம் ரூபா சரீரப்பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

இதற்கிடையில் - அதிரடிப்படை

(10ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சீரழிவுச் செயல்களைப் புரிவோர்...

(முதலாம் பக்கத் தொடச்சி)

மானிப்பது அவ்வினம் பின்பற்றுகின்ற உயர்வான பண்பாட்டு விழுமியங்களே. ஓர் இனத்தின் ஆரோக்கியமான வாழ்விற்கு அடித்தளமானது பண்படுத்தப்பட்ட வாழ்வியல்பே. அந்த வகையில் தமிழ்த் தேசிய இனமான நாமும் வரலாற்றுக் காலம் தொட்டே எமக் கேயுரிய தனித்துவமானதும், சிறப்பானதுமான வாழக்கைமுறையினூடே வாழ்ந்து வருகின்றோம். எமது வாழ்வியல்பே எமது இனத்தின் தனித்துவத்தைப் பறைசாற்றி நிற்கின்றது. மேன்மை பொருந்திய உயர்ந்த விழுமியங்களைத் தாங்கிய வாழ்வியலாக தமிழரின் வாழ்வியல் மிளிர்கின்றது.

ஓர் இனத்தின் அழிப்பிர் ஒடுக்கப்படுவதற்காக அல்ல திக்கம் செலுத்துவதற்காகச் படுகின்ற எதிர்த்தரப்பினர் முதலில அவ்வினத்தின் வாழ்வியலின் மீதே தமது கவனத்தைத் திருப்புகின்றனர். அழிக்க முற்படுகின்ற இனத்தின் கலாசார, பண்பாட்டு அம்சங்களின் தனித்துவத்தை சிதைத்துவிடுவது எதிரிகள் பின்பற்றுகின்ற பிரதான உத்திகளில் ஒன்றாகும். அதற்கேற்பவே தமிழ்த் தேசிய இனத்தின் தேசியத்தைச் சிதைப்பதற்காக அதாவது நில ஒருமைப்பாடு, மொழிப் பாரம்பரியம், உயர்ந்த பண்பாட்டு வாழ்வியல், விழுமியங்கள் என்பவற்றை அதற்கேயுரிய தனித் தன்மைகளில் இருந்து விடுபடவைப்பதற்காகக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக இலங்கையில் ஆட்சியாளர்களால் திட்டமிட்டு சதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இத்திட்டமிட்ட சீரழிப்பு 1995ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியின் பின்பு இராணுவத்தால் யாழ்.குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டு, மக்கள் மீண்டும் குடியேறியபின் உச்சக் கட்டத்தை அடைந்தது. இத்தகைய திட்டமிட்ட சீரழிக்கும் செயற்பாடுகளில் எம் சமூகத்தைச் சேர்ந்த சிலரும் கோடரிக் காம்புகளாகச் செயற்படுவது வேதனைக்குரியது மட்டுமல்ல வெட்கித் தலை குனியவேண்டியதுமாகும்.

குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டதன் பின்னர் ஒழுங்குகள் முற்றாகத் தளர்த்தப்பட்டன. களவுகள், கொள்ளைகள், பெண்கள் மீதான சேஷ்டைகள், பாலியல் கெடுபிடிகள், தெருச் சண்டைகள், குழு மோதல்கள் என்பன தலைவிரித்தாடுவதற்குக் குடாநாட்டில் களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது. குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு மிக மோசமான தட்டுப்பாடு நிலவும் காலங்களிலெல்லாம் போதைப் பொருள்கள், நீலப் படங்கள் போன்றவற்றைப் பெறக்கூடிய அளவுக்கு ஆட்சியாளர்களும், இராணுவமும் வசதிகளை ஏற்படுத்தியிருந்தது. இந்தக் கூசிழிவுப்(ஆபாசப்) படங்கள் இன்றைய இளம் சமூகத்தினரின் நாடி நரம்புகளில் கொடிய நஞ்சாக ஒட்டிக்கொண்டிருக்கிறது. பாதுகாப்பு வரி, பொருள்கள் சேவைகள் வரி போன்றவற்றை அத்தியாவசியப் பொருள்கள் மீது பெருமளவில் சுமத்தி, மதுபான வகைகள், போதைப் பொருள்கள் என்பனவற்றின் மீது ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைந்த தீர்வையில் - மலிந்த விலையில் - தருவித்து சமூகத்தை அதல பாதாளத்துக்குக் கொண்டுசெல்லும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் விளைவாகக் குடாநாட்டில் வாழ்கின்ற அநேகமான உயர் வகுப்பு, சாதாரண வகுப்பு மாணவர்கள் மற்றும் இளவயதினர்கள் மது அருந்துபவர்களாகவும், புகைப் பிடிப்பவர்களாவும் மாறியுள்ளனர். இந்த நிலைமை பெரும் கவலையையும், வேதனையையும் தருவதாக உள்ளது. குடாநாட்டில் மட்டுமல்ல தமிழ்மக்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் எல்லாம் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு பொருளாதாரத் தடை மற்றும் இராணுவக் கெடுபிடிகள் பெரும் தடையாக அமைந்துள்ளன. மாணவர்களுக்கான பாடப்புத்தகங்களுக்கு பாதுகாப்பு அனுமதி பெறுவதும், பாடசாலைக்கு கொண்டு வந்து சேர்ப்பதும் பெரும் சிரமமான விடயங்களாக இருந்தபோதெல்லாம் குடிவகைகளுக்கு எதுவித பாதுகாப்பு அனுமதிக் கெடுபிடிகளோ, போக்குவரத்துக் கெடுபிடிகளோ இன்றி, தாராளமான இறக்குமதிக்கு வழியேற்படுத்தப்பட்டது. இதன் விளைவு இன்று இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கின்ற யாழ்.குடாநாட்டு மாணவர்களின் உயர்நிலை மற்றும் நடுத்தரக் கல்விகள் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளன. இதனைக் கடந்த உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் தெளிவாக்கியுள்ளன. இன்று பட்டப்பகலில் சனநடமாட்டம் நிரம்பிய பிரதான வீதிகளில் கூட பெண் பிள்ளைகள் பயணிப்பது அச்சத்துக்குரியதாக மாறிவிட்டது. இந்த நிலை மாற்றப்படவேண்டும்.

இவ்வாறு தகாத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள், தாமும் ஒரு குடும்பத்தின் உறுப்பினர் என்பதையும் தமது குடும்பத்திலும் அம்மா, அக்கா, தங்கை, சிறியதாய், பெரியம்மா, மாமி என்று பெண்கள் இருக்கிறார்கள் என்பதையும் எவ்வாறு மறந்து போனார்கள் என்பது கேள்விக்குரியதே? சந்திக்குச் சந்தி குந்தியிருந்து தகாத வார்த்தைகள் பேசுவதும், பாலியல் துன்புறுத்தல்களில் ஈடுபடுவதும், குழு மோதல்களில் ஈடுபடுவதும், கொலை, கொள்ளை மோசடிகள் போன்றவை அதிகரித்திருப்பதும் எமது உயர்வான வாழ்க்கை முறையை சீரழித்து வருவதைக்காட்டுகிறது. இத்தகைய செயற்பாடுகள் தொடருமாக இருந்தால் மனிதர்களாக வாழ்வதற்குரிய தகுதியையே தமிழ் மக்கள் இழக்க வேண்டிவரும். எனவே, இத்தகைய சீரழிவுச் செயற்பாடுகள் தொடர்ந்தும் நடப்பதை கௌரவத்தை விரும்புகின்ற தன்மானமுள்ள எந்த மனிதனும் ஏற்றுக்கொள்ளவோ அனுமதிக்கவோ மாட்டான். அவ்வாறாயின் நாம் இதனை அனுமதிக்கப்போவதிலலை. இத்தீயசெயல்களைச் செய்பவர்கள் தமது சிந்திக்கும் ஆற்றலைப் பயன்படுத்தி, சிந்தனை செய்து இவற்றைச் செய்யாதுவிடுவதே சமூகத்திற்கும், அவர்களுக்கும் நன்மை தருவதாக அமையமுடியும். இதனைப் புரிந்துகொள்ளத் தவறி மீண்டும் மீண்டும் தகாத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது சமூகத்தின் நன்மை கருதிக் காத்திரமான முடிவுக்கு நாம் வரவேண்டியிருக்கும். இதற்கான அணுகுமுறைகளை மக்கள் ஆதரவுடன் முன்னெடுப்போம்.

எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கின்ற உரிமை இங்கே வாழ்கின்ற எவருக்குமே இல்லை. அவ்வாறு சிதைப்பதை அனுமதிக்கவும் முடியாது. எனவே கௌரவமான வாழ்வை வாழும் மனிதர்கள் எல்லோரும் எமது கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாப்பதற்கான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

சமூகத்தின் இயல்பு வாழ்வைச் சீரழிக்கின்ற கொலைகள், கொள்ளைகள், பாலியல் துன்புறுத்தல்கள், பணம் பறித்தல், மனங்களைச் சிதைத்தல் போன்ற செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். தனிப்பட்ட சிலரது நன்மைக்காக ஒட்டுமொத்தமான மக்களின் வாழ்வைச் சீரழிக்கமுடியாது. எனவே, தகாத வேலைகளில் ஈடுபடுவோர் அதனை நிறுத்தாத பட்சத்தில் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனவே யாழ்.குடாநாட்டில் வாழ்கின்ற அனைவரும் புரிந்துணர்வின் அடிப்படையில் இச்சீரழிவு நடவடிக்கைகளை ஒழிப்பதற்காக ஒன்று சேர்ந்து உழைப்போம். உயர்ந்த விழுமியங்கள் கொண்ட சமூகத்தை மீண்டும் கட்டியெழுப்புவோம். - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கடற்படையினர் தொடர்ந்தும் கெடுபிடி

தென்மராட்சி,மே23

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் மீன்பிடிக்கச் சென்றோர் 50 மீற்றர் தூரத்திற்கு அப்பால் செல்வதைத் தடுத்து கடற்படையினரால் திருப்பி அனுப்பியதாகக் கூறப்படும் சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சமாசத்தினர் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக சமாச வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-117)

## மலர் வெளியீடு

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி கனடாவிலுள்ள பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் ஆண்டு நிறைவு மலரொன்றை வெளியிட்டுள்ளனர்.

கல்லூரியின் வரலாறு, சாதனைகளை பறைசாற்றும் இம்மலரில் பாடசாலையின் வளர்ச்சிக்குரிய திட்டமிடல்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. (ம-13-28)

## வன்னியிலிருந்து கலாசாரக் குழு வருகை

யாழ்ப்பாணம்,மே23

வன்னி நிலப்பரப்பில் இருந்து சமாதானத்துக்கான கலாசாரக் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளது.

புதுவை அன்பனின் நெறியாள்கையில் தயாரிக்கப்பட்ட 'கரை தேடும் ஓடங்கள்' என்னும் நாடகத்தை இக்குழு இங்கு மேடையேற்றி வருகின்றது.

தமிழ் மக்கள் மீதான கொடுமைகள், போராட்ட வடிவங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் இந்த நாடகம் நேற்றுக்காலை யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் மேடையேற்றப்பட்டது.

சமகால அரசியல் நிலையை விளக்கும் கூட்டமும் அங்கு இடம் பெற்றது.

கல்லூரி அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியல் துறைப பொறுப்பாளர் இளம்பரிதி, மகளிர் பொறுப்பாளர் தமிழ்விழி, அரசியல் துறைப்பிரமுகர் பாப்பா ஆகியோர் அக்கூட்டத்தில் உரையாற்றினர். (ஐ-3)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,மே23

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 2002ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமைவரை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

நாளை காலை 8மணி தொடக்கம் நடைபெறவுள்ள போட்டிகள் பற்றிய விவரம் வருமாறு:-

**17வயதுப் பிரிவு**

யாழ்.இந்துக் கல்லூரி எதிர் கைதடி முத்துக்குமாரசாமி வித்.

வரணி ம.வி. எதிர் நெல்லியடி ம.ம.வித்.

**19வயதுப் பிரிவு**

யாழ். புனித சாள்ஸ் வித். எதிர் பளை மத்திய கல்லூரி

யாழ்.புனித யோசப் வித். எதிர் நாவற்குழி ம.வித். (எ-ரி)



# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 07 - 07 - 1934 | 25 - 05 - 1991 |

## அமரர் இராஜசிங்கம் இராஜமனோகரன்

(பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்)

திதி: 23.05.2002

உங்கள் ஆத்மா சாந்தியடைய
காசி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

*"இராஜகிரி"*
*தெல்லிப்பழை.*

(C/22240)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 - 06 - 1945 | 23 - 04 - 2002 |

## அமரர் இ.பஞ்சாட்சரம்

திதி: ஏகாதசி 23.05.2002

*பல்லோரும் நினைந்துருகும் பஞ்சாட்சரம்*
*பலகாலம் தவமிருந்து பெற்ற பிள்ளை*
*எல்லாரும் ஏங்குகிறார் கண்ணுக்குள் கனவாகி*
*காற்றாகிப் போய்விட்டாயே நிலை*
*இல்லா உலகத்தில் வாழ்தல் அரி தென்றோ?*
*இவ்வுலக வாழ்க்கை போதுமென்று எண்ணியோ?*
*வல்லான் வகுத்த வழிசென்று வானுலகம்*
*புகுந்த உங்கள் ஆத்மா சாந்தி பெறுக.*

கொக்குவிலைச் சேர்ந்த இராசையா தம்பதிகளின் ஏகபுத்திரன் அமரர் பஞ்சாட்சரத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (23.05.2002) வியாழக்கிழமை மு.ப.10 மணியளவில் திரு.கு.கனகரத்தினம் அவர்களின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இணுவில் தெற்கு,*
*இணுவில்.*

(4057)

**கனகரத்தினம் குடும்பத்தினர்.**

# தேவை

*கொக்கா கோலா குளிர்பானங்களை விற்பனை செய்வதற்கு பின்வரும் பணியாளர்கள் அமைய அடிப்படையில் தேவை.*

- விற்பனைப் பிரதிநிதி வயது 25 - 55 (ஆண்) *(Sales Representative)*
- கூலியாளர்கள் வயது 20 - 30 (ஆண்)
- வெற்றுப் போத்தல்களை ஒழுங்குபடுத்த பெண் ஊழியர் வயது 20 - 40
- நாளாந்தத் தேவைகளுக்கு காலை 7.30மணியிலிருந்து இரவு 7.30 மணிவரை வாடகைக்கு *Elf Van* தேவை.

**விண்ணப்ப முடிவு திகதி : 30.05.2002**

**விண்ணப்பங்களை நேரடியாகக் கையளிக்கவும்**

**நியூ பாலகிருஷ்ணன் ஸ்ரோர்ஸ்,**
164, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.3212
(பழைய ஈழநாடு காரியாலயத்துக்கு அருகில்) (4043)

# செய்திக் கொத்து

## மீசாலை ஏசியனில் இரு பாடசாலைகள்

கொடிகாமம்,மே23

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மந்துவில் றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்ஆகிய பாடசாலைகள் கடந்த திங்கள் முதல் மீசாலையிலுள்ள ஏசியன் கல்வி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த பாடசாலைகள் சொந்த இடத்தில் இயங்குவதற்கு அனுமதி கிடைக்காத போதும் அதிபர்களின் விடாமுயற்சிகளாலேயே இப பாடசாலைகள் ஏசியன் கல்வி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-13-ரி)

## மக்கள் வங்கி பணிகள் விஸ்தரிப்பு

கல்வியங்காடு,மே23

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மக்கள் வங்கியின் விசேட கருமபீடத்தில் சேமிப்பு கணக்குகளை ஆரம்பிப்போர் தொகை அதிகரித்து வருவதாக வங்கி நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் மக்களின் நன்னை கருதி சநதையில் சிறுவியாபார நடவடிக்கையில் ஈடுபடுவோருக்கு குறைந்தவட்டியில் கடன் வழங்கவும், வங்கி யின் செயற்பாட்டை காலை7.00 மணியிலிருந்து ஆரம்பிக்கவும் தீமானித்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-13-ரி)

## மயானங்கள் பிரதேச சபையிடம்

கல்வியங்காடு,மே23

கொக்குவில் இந்து மயானம், திருநெல்வேலி இந்து மயானம் ஆகியவை நல்லூர் பிரதேச சபையின் பொறுப்பில் விடப்பட்டுள்ளன.

இறுதிச்சடங்கிற்கான கட்டண வசூலிப்பில் நிலவிய வேறுபாடு தொடர்பாக மக்கள் முறையிட்டதை தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், தற்போது இறுதிச்சடங்கிற்கு ரூபா850 அறவிடபடுவதாகவும் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (ம-13-ரி)

## தட்டெழுத்து வகுப்புக்கள்

தமிழ் தட்டெழுத்து-சுருக்கெழுத்து வகுப்புக்கள் முறைசாராக் கல்விப் பிரிவினால் எதிர்வரும் திங்கட்கிழமை சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப் படவுள்ளன.

பாடசாலையை விட்டு விலகியோருக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வகுப்புக்களில் பயில விரும்புவோர் பாடசாலை அதிபர் ச. கைலாயநாதனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-13-29)

## நியமனம்

வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளராக அ.கணேசமூர்த்தி நியமனம் பெற்றுள்ளார்.

இந்த நியமனம் வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி வழங்கப்பட்டது. (ம-13-17)

## பறளாய் ஆலய முன்றிலில் மக்கள் வங்கியின் விசேட கருமபீடம்

சங்கானை மக்கள் வங்கிக் கிளையின் விசேட கருமபீடம் ஒன்று பறளாய சிவசுப்பிரமணிய ஆலய முன்றிலில் நாளையும் நாளை மறுதினமும் செயலாற்றவுள்ளது.

வங்கியின் இந்த கருமபீடத்தில் மாணவர் மறுமலர்ச்சிக் கணக்கு, சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்கு, ஜயஸ்ரீ பரிசுத்திட்ட சேமிப்புகணக்கு, வனிதாவாசன பெண்களுக்கான பரிசுத்திட்ட சேமிப்புக் கணக்கு, முதலீட்டு சேமிப்புக்கணக்கு போன்றவற்றை ஆரம்பிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-13-29)

## யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் முறைசாராக் கல்விப் பிரிவு

மேற்படி பிரிவின் தமிழ் - தட்டெழுத்து சுருக்கெழுத்து வகுப்பு 2002.05.27ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு (புதியநேரம்) ஆரம்பிக்கப்படவுள்ளது. பயிலவிரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்.

அதிபர்,
யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்,
*சங்கானை.*

(4056)

## கொக்கா கோலா விற்பனையில் 30 வருடகால சேவை

### நியூ பாலகிருஷ்ணன் ஸ்ரோர்ஸ்

*மீண்டும் யாழ்நகரில்*

கொக்கா கோலா (Coca Cola)
பன்ரா (Fanta)
ஸ்பிறைற் (Sprite)
போட்டெல்லோ (Portello)

எம்மிடம் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நியூ பாலகிருஷ்ணன் ஸ்ரோர்ஸ்,**
*164, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.* T.P.3212

(யாழ்.வர்த்தக சங்க காரியாலயத்துக்கு அருகில்). (4042)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



| மண் செழிக்க | விண் செழிக்க |
|---|---|
| 20 - 07 - 1926 | 23 - 04 - 2002 |

## அமரர் நாகர் இராமலிங்கம் J.P.

*(ஓய்வுபெற்ற அதிபர்)*

கண்கள் கலங்குதையா - உன்
காலம் முடிந்ததனால்
காலம் முடிந்ததுவோ - நீ
காற்றினில் கலந்தனையோ?

சற்றும் நாம் எண்ணவில்லை
சாவு உம்மை அணைக்குமென்று!
ஓலம் இடுகின்றோம் - நீயோ
உணராத நிலையானாய்!

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

இன்று (23.05.2002) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியங்களிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

*"மிதிலை"*
*54/1, கலைமகள் வீதி,*
*அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.*

(4050)

**- பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# மரண அறிவித்தல்

## திருமதி விநாயகம் நாகரத்தினம்

துன்னாலையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி விநாயகம் நாகரத்தினம் அவர்கள் 21.05.2002 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விநாயகம் (மதுவரி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் சின்னத்தம்பி - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், கலைராணி, குலேந்திரராஜா (ஜேர்மனி), ரவீந்திரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் R.D.A), தெய்வேந்திரராஜா (லண்டன்), வரதராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோகரன் (உதவி முகாமையாளர், தே.வீ.அ.அ.ச), தனேஸ்வரி (விரிவுரையாளர், முகாமைத்துவம் , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), ரஜனி (ஜேர்மனி), பபி (ஜேர்மனி), நளினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவபாக்கியம், மதுரைமீனாட்சி, குலேந்திரம், காலஞ்சென்ற பரமசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கார்த்திகா, கீர்த்திகா, கீர்த்திகன், புவிராஜ், ரவிராஜ், யதுசங்கித், கஜீவன், திவ்வியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"ராணி இல்லம்",*
*துன்னாலை வடக்கு, கரவெட்டி.* (4052)

தகவல்:
சி.மனோகரன்.


IBMS

**IBMS DOUBLE + SCHOLARSHIP PROGRAM 2002/2003**

*Apply Before : 24-05-2002*
*Scholarship Exam on 01-06-2002*
*Classes Commence on 08-06-2002*

விண்ணப்பத்திகதி எக்காரணம் கொண்டும் நீடிக்கப்படமாட்டாது
Phone - 021-3165 e mail - ibms@sltnet.lk

விபரங்கட்கு :-
11.05.2002 உதயன் விளம்பர இணைப்பு
OR
தலைமை காரியாலத்துடன் அல்லது கிளைநிறுவனங்களுடன் தொடர்புகொள்ளவும்.

Institute of Business Management Studies

Head Office :- No.701,K.K.S Road, Jaffna.
Branches :- Main Road, Chankanai.
N.M.M.V Road, Nelliyadi.



**தங்குமிட வசதிகள்**

கொழும்பிலிருந்து வருவோருக்கு தங்குமிட வசதிகள் உண்டு
இல.60, அரசடி றோட்,
தட்டாதெரு,
யாழ்ப்பாணம்.
(சம்பந்தர் கிளினிக் அருகே)
(4017)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புறொயிலர் விற்பனைக்கு

வைத்திய ஆலோசனைப்படி எம்மால் வளர்க்கப்பட்ட நோயற்ற புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. (வாங்கி விற்கப்படுபவை அல்ல) சுகாதார முறைப்படி இலவசமாக சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, வட்டக்குளம் முன்பாக, பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய். (3987)

## விற்பனைக்கு

பகிறா பாம் No-1 புறொயிலர் குஞ்சுகளும், பிறீமா சிவ[illegible] குஞ்சுகளும் இன்று [illegible] பெற்றுக்கொள்ளலாம். புறொ[illegible] குஞ்சு ரூபா 35/= மட்டுமே. மு[illegible] பதிவு செய்தவர்கள் 6மணிக்கு முன் பெற்றுக்கொள்ளவும். தொடர்பு: இல 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (4025)

தேக்கு, முதிரை, வீட்டுத் தளபாடங்கள், லேனோகட்டில், குளிர்சாதனப்பெட்டி, சிங்கர் தையல் இயந்திரம் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: E.J.செல்வரட்ணம், சில்லாலை, பண்டத்தரிப்பு. (4005)

மிகவும் நல்ல நிலையில் உள்ள குபோட்டா 5.K.V சிங்கிள் பேஸ் ஜெனறேற்றர் விற்பனைக்கு உள்ளது. தொடர்பு: சி.பசுபதி, பிரதேசசபை, கரவெட்டி. (4028)

4 பரப்புக் காணியுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: லீலா, கலட்டி ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு (உப்புமடம் சந்தியிலிருந்து 200 மீற்றர்). (4033)

## தவறிவிட்டது

இராதாகிருஷ்ணராஜா ரங்கநாயகி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.796732024V), கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ணாவுக்கும் இணுவில் கந்தசாமி கோயிலுக்கும் இடையில் பேர்ஸுடன் தவறிவிட்டது. கணடெடுததவர்கள் ராமகிருஷ்ணா அதிபரிடம் அல்லது இணுவில் அபராஜிதக் குருகளிடம் ஒபபடைத்துதவவும். சன்மானம் வழஙகப்படும். (3994)

தேவராசா ரஜ்பன் ஆகிய எனது கடவுச்சீட்டு (Pass Port இல.M 1970254) வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரும்வேளை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள முகவரியில் ஒப்படைக்கவும். K.தேவராசா, கொக்குவில் மேற்கு அம்பாள் வீதி. சன்மானம் வழங்கப்படும். (4029)

ரட்ணம் ராஜரூபன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 732352082V), விசேட அடையாள அட்டை (இல.0906028406), C.T.B அடையாள அட்டை என்பன 17.05.2002 வெள்ளிக்கிழமை கோண்டாவில் டிப்போவுக்கும் அல்லைப்பிட்டி 4ஆம் கட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கோண்டாவில் டிப்போவில் ஒப்படைத்து உதவவும். (4035)

## பிறிமா கோழிக்குஞ்சு

பிறிமா கைலைன் பிறவுண் வெள்ளை பேட்டுக் குஞ்சுகளும், புறொயிலர் குஞ்சுகளும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 'மல்லிகாபதி', மானிப்பாய். (C/22237)

## தேவை

புறொயிலர் கோழிகள் உடன் தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு: 19, முருகேசர் லேன், முததிரைச் சந்தையடி, நல்லூர். (3950)

## ஆங்கிலக் கல்வி

இலகுவான முறையில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க, அடிப்படையிலிருந்து இலக்கணத்துடன் கற்பிக்கப்படும். வீடுகளுக்கு வந்தும் கற்பிக்க முடியும் தொடர்பு: இ.தேவதாஸ், 231, கோயில் வீதி, நல்லூர். (4021)

# 769இலக்க பஸ் பயணிகள் அலைச்சல்

தென்மராட்சி,மே23

யாழ். பஸ் நிலையத்தில் 769 இலக்க மார்க்கத்திற்கான பஸ் தரிப்பிடம் இல்லாததால் இப்பகுதிக்குச் செல்லும் மக்கள் பஸ் நிலையம் முழுவதும் பஸ்ஸினைத் தேடி அலையும நிலைஉள்ளது.

பஸ் சாரதிகள் நினைத்த இடத்தில் வைத்து பயணிகளை ஏற்றி செல்வதால் பயணிகள் பஸ்ஸைத் தேடி அலைவதைக் காணமுடிகிறது.

தென்மராட்சி பிரதேச இடம்பெயர்வின் பின்னர் 769மார்க்க பஸ்தரிப்பிடம் வேறு மார்க்கத்திற்கு மாற்றப்பட்டது. ஆனால் மீண்டும் இந்த மார்க்கத்திற்கு பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டும் பஸ் தரிப்பிடம் அமைக்கப் படாதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

(ஜ-117)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் பழைய மாணவரான வைத்திய கலாநிதி

**பேதுறு பிலிப்ஸ்**

அவர்களுக்கு அண்மையில் **சகஸ்ராபிஷேக வைத்தியசிகாமணி விருது** அரசினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறித்து நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், பதிவாளர், விரிவுரையாளர்கள்,
லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி
யாழ்ப்பாணம்.

(4038)

உ

## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வைகாசிப் பெருவிழா - 2002

*இடம்:* சந்நிதியான் ஆச்சிரமம்
*காலம்:* நாளை(24-05-2002) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி
*தலைவர்:* நல்லை ஆதீனகுரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர் பரமாச்சார்ய சுவாமிகள்
*வரவேற்புரை:* திரு.சி.நாகலிங்கம் (பேரவைத் தலைவர்)
*விருதுபெறுபவர்:* திரு.T.N.பஞ்சாட்சரம்
*வழங்குபவர்:* ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமிகள் சிவதொண்டன் நிலையம்

*வைத்திய சேவைக்காக பாராட்டி கௌரவிக்கப்படுவோர்:*
1. மகப்பேற்று வைத்திய நிபுணர் திருமதி G.பவானி
2. பொது வைத்தியம் Dr.M.யோகீஸ்வரதேவன்

*கௌரவிப்பை வழங்குபவர்:*
செல்வி நவமலர் கனகரெட்ணம்
பணிப்பாளர் யாழ். போதனா வைத்தியசாலை

வழமைபோல ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் இடம்பெறும் விஷேட அபிஷேக ஆராதனைகளுடன் மேற்படி நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.
- பேரவையினர்

(C/22238)

## செம்பியன்பற்று
### புனித பிலிப்பு நேரியார் யாத்திரைத் தல பெருவிழா

நாளைமறுதினம் 25ஆந் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணிக்குத் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நடைபெறும்.

26ஆம் திகதி ஞாயற்றுக்கிழமை காலை 7.00 மணிக்குத் திருநாள் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

- பங்குத் தந்தை

(C/22239)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியின் அதிபராகக் கடமையாற்றிய

**வைத்திய கலாநிதி ப.உ ரோமகேஸ்வரன்**

அவர்களுக்கு அண்மையில் **சகஸ்ராபிஷேக வைத்தியசிகாமணி** விருது அரசினால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறித்து நாம் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- அதிபர், பதிவாளர், விரிவுரையாளர்கள்,
*லங்கா ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,*
*யாழ்ப்பாணம்.*

(4039)

## சுந்தரமூர்த்தி & சன்ஸ்
### வீரகத்திப்பிள்ளை ஓட்டுக் கொம்பனி

முதலாம் நம்பர் "வண்ணாத்திப்பூச்சி"
"குத்துவிளக்கு"
"ரூ ஸ்ரார்"
"திறி ஸ்ரார்"

முதலிய மார்க் தட்டோடுகள், முகட்டோடுகளை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**சுந்தரமூர்த்தி & சன்ஸ்**
210 (76), ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(4031)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
1918
12
18

மறைவு
2002
04
23



### அமரர் கார்த்திகேசு முருகப்பா

(இளைப்பாறிய ஆசிரியர்)

அன்புள்ள எம் ஐயா
ஆசையாய் எமை வளர்த்தீர்!
இன்பமாய் நாம் வளர
கற்பூர மாய் எரிந்தீர்!
அம்மன் ஆலயத்தில்
ஆசீர்வா தம்செய்தீர்!
அன்புப் பேர்த்தியை
முத்தத்தில் நீர் அணைத்தீர்!
என்கையால் நீர் வாங்கி
இன்பமாய்க் குடித்தீர்கள்!
அன்புடன் பேர்த்திக்கு
அதிக பணம் கொடுத்தீர்கள்!
இன்று உலகைவிட்டு
ஐயாவே ஏன் சென்றீர்?
எப்படி நான் மறப்பேன்
எம் இனிய ஐயாவை?
பிரித்தது விதிதானோ?
உடன் பிறந்தோர் சதிதானோ?
ஆயிரம் உறவிருந்தும்
ஆசைதர நீரில்லையே!
ஓடியது ஒருமாதம்
ஓடிடுமோ எம்துயரம்?
முகம்மறக்க முடியவில்லை
முன்வந்து கடமைசெய்ய
அகம் இருண்டோர் விடவில்லை!
ஆரிடம் நான் சொல்லி அழ?
ஆறாத எம் துயரை
ஆற்றுவிப்பார் யாருளரோ?

*ஐயாவே உம் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்!*

உங்கள்,
மகள் : உமா கேஸ்வரி,
மருமகன் : சிவசுப்பிரமணியம்,
பேர்த்தி : சுகன்யா.

*மீசாலை.* (4040)

உ
கணபதி துணை

## உபநயன பிரம்மோபதேச சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வதப்தி ஸ்ரீ நிகழும் மங்களகமான சித்திரபானு வருஷம் வைகாசி மாதம் 10ஆம் நாள் (24.05.2002) வெள்ளிக்கிழமை விசாக நட்சத்திரமும், திரயோதசி திதியும் சித்தயோகமும்கூடிய சுப நன்னாளில் முற்பகல் 9 மணிமுதல் 10 மணிவரை உள்ள சுபமுகூர்த்த வேளையில்

கோண்டாவில் சிவஸ்ரீ ஸ்கந்த திருஞானசம்பந்தக் குருக்கள் தம்பதிகளின் **பௌத்திரனும்**
புன்னாலைக்கட்டுவன் பிரம்மஸ்ரீ சோ.பாலகிருஷ்ணசர்மா தம்பதிகளின் **தௌஹித்திரனும்**

எமதுஏகபுத்திரனுமாகிய
**சிரஞ்சீவி தேவநாதசர்மா (அருண்)**
அவர்களுக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய மண்டபத்தில் யக்னோபவீததாரணம்/பிரம்மோபதேசம் நடைபெற திருவருள் பாலித்துள்ளதால் தாங்கள் அனைவரும் சுற்றஞ் சூழ வருகைதந்து உபநீதனை ஆசீர்வதிக்குமாறு வேண்டுகிறோம்.

வரவேற்புசாரம் எமது ஊரெழு கிழக்கு இல்லத்தில் வெள்ளிக்கிழமை மாலை 4 மணியிலிருந்தும் சனிக்கிழமையும் நடைபெறும்.

**உபநயன பிரம்மோபதேசகுரு வைதிககிரியா ரத்னா கௌடின்யசோம. வரதராஜசர்மா.**
**கொழும்புத்துறை.**

*இங்ஙனம்*

தாங்கள் நல்வரவை நாடும் **பிரம்மஸ்ரீ தி.சோமநாதசர்மா (கண்ணன்) - தேவகி தம்பதிகள்.**

(4030)

உதயன்

# ஐ.தே.கவின் அமோக வெற்றி

கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி அமோக வெற்றியீட்டியிருக்கிறது.

தேர்தல் நடைபெற்ற 17 உள்ளூராட்சி மன்றங்களில் இரண்டைத் தவிர மற்றெல்லாவற்றையும் ஐ.தே.க. கைப்பற்றிவிட்டது.

போட்டி நடைபெற்ற கொழும்பு, காலி, இரத்தினபுரி மாநகர சபைகளில் இரத்தினபுரி தவிர மற்ற இரண்டும் ஐ.தே.கவின் கைக்கு வந்துவிட்டன.

நான்கு நகர சபைகளில் ஒன்றைக்கூட விடாமல் எல்லாவற்றையும் ஐ.தே.க. தனதாக்கிக் கொண்டுவிட்டது.

பத்துப் பிரதேச சபைகளில் ஒன்று தவிர மற்ற ஒன்பதிலும் ஐ.தே.கவே வெற்றிபெற்றிருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கவுக்குக் கிடைத்திருப்பது சாதாரண வெற்றியல்ல. குறிப்பிடத்தக்க மகத்தான வெற்றி.

ஐ.தே.க. ஆட்சி அமைத்த பின்னர் நடந்த இரண்டாம் கட்ட உள்ளூராட்சித் தேர்தல் இது. முதலாம் கட்ட உள்ளூராட்சித் தேர்தல் கடந்த மார்ச் 20இல் நடந்தது. அதிலும் ஐ.தே.க. பெரு வெற்றியீட்டியது.

முதல்கட்ட உள்ளூராட்சித் தேர்தல் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுச் சுமார் ஒருமாத காலத்தில் நடந்தது.

ரணிலின் சமாதானப் பிரசாரத்தில் மயங்கி பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுக்கு வாக்களித்த மக்கள், புரிந்துணர்வு உடன்படிக்கை நாட்டுக்கும், நாட்டுமக்களுக்கும் எத்தகைய தீங்கிழைக்கக் கூடியது என்பதை அறியாமலே முதலாம் கட்ட உள்ளூராட்சித் தேர்தலிலும் ஐ.தே.கவுக்கு வாக்களித்தார்கள் என்று எதிர்க்கட்சியினர் கூறினார்கள்.

அப்படியானால் புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்து சுமார் மூன்று மாதங்களாகும் இவ்வேளையில் நடந்த இரண்டாம் கட்ட உள்ளூராட்சித் தேர்தலிலும் மக்கள் ஐ.தே.கவுக்கே வாக்களித்திருக்கிறார்களே ஏன்? அவர்களால் புரிந்துணர்வு உடன்படிக்கையை இன்னும் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை என்று சொல்லலாமா?

மாறாகப் புரிந்துணர்வு உடன்படிக்கை பற்றி எதிர்க்கட்சியினர் கூப்பாடு போடுவதையும் அதை வைத்துக்கொண்டு சதா பயங்காட்டி வருவதையும் மக்கள் விரும்பவில்லை. புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதில் சில குறைபாடுகள் இருந்தாலும் உடன்படிக்கை தீங்கற்றது; சிறந்தது என்பதை மக்கள்- புரிந்துகொண்டுள்ளார்கள்.

பதினேழு உள்ளூராட்சி மன்றங்களில் பதினைந்தை மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் ஐ.தே.கவிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள், சுவரொட்டி இயக்கங்கள் முதலானவற்றை நடத்திவரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி., மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற கட்சிகளிடம் எந்தவொரு உள்ளூராட்சி மன்றத்தின் நிர்வாகத்தையும் மக்கள் கொடுக்கவில்லை.

ஐ.தே.கவிற்கு கிடைக்காமல் போன இரண்டு உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்று லிபரல் கட்சியையும் மற்றது சுயேச்சைக்குழு ஒன்றையும் சென்றடைந்துள்ளன.

யுத்தநிறுத்தத்துக்கும், பிரச்சினைத் தீர்வுக்கும், சமாதானத்துக்கும் வழிசெய்யும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் எதிர்க்கட்சியினருக்கு இப்படி ஒரு படுதோல்வி! மக்கள் நல்ல பாடம் புகட்டி விட்டார்கள்.

எதிர்க்கட்சியினர் இனியும் எதிர்ப்புக்காட்ட முனைவார்களேயானால் அது மக்களையே எதிர்ப்பதாகவும் அவர்களைப் பகைத்துக் கொள்வதாகவும் இருக்கும்.

ஆக, புரிந்துணர்வு உடன்படிக்கையை முறைப்படி நடைமுறைப்படுத்தி சமாதான இலக்கை எளிதில் அடைவதற்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. அவர் சரிவரப் பயன்படுத்திக்கொள்வாரா?

# இலங்கையில் மேலாதிக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா முயற்சி

## இந்தியாவை எச்சரிக்கிறார் நெடுமாறன்

தஞ்சாவூர்,மே23

பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் அமெரிக்கா தனது பிடியை வைத்திருக்கிறது. இப்போது இலங்கையில் தனது மேலாதிக்கத்தை ஏற்படுத்த அமெரிக்கா முழுமுயற்சி செய்துவருகிறது.

இது இந்தியாவின் நலனுக்குப் படுபாதகமானது.

- இப்படி இந்தியாவை எச்சரித்திருக்கிறார் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப.நெடுமாறன்.

'இலங்கையில் சமாதான முயற்சிகளும் அவற்றை முறியடிக்கும் சக்திகளும்' என்ற தலைப்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கூட்டம் ஒன்றில் நெடுமாறன் பேசினார்.

அவர் தனது பேச்சில் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் நீண்டகால யுத்தத்தின்பின் இன்று அடிப்படையில் சிங்களமக்களும் தமிழ்மக்களும் சமாதானத்துக்காக ஏங்குகிறார்கள். இன்றைய சமாதான முன்னெடுப்புக்களின் அடிப்படை அதுதான்.

இலங்கை இராணுவமும் யுத்தத்துக்கு எதிராகவே இருக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் போரில் காட்டிய வீரதீரமும், செய்த தியாகங்களுமே இதற்குக் காரணம் எனலாம். புலிகள் போரில் மட்டுமன்றி ஜனநாயக நடைமுறைகளுக்கு அமையக் காரியமாற்றுவதிலும் சிறந்து விளங்குகிறார்கள். அதனால் தான் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் மற்றும் அமெரிக்க பிரித்தானிய அரசினர் யாவரும் புலிகளின் சமாதான முயற்சிகளை வரவேற்கிறார்கள்.

ஆனால், தமிழ்நாடு அரசு இந்தவேளையில் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்து நாடு கடத்த வேண்டும் என்று சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றுகிறது.

இது தேவையா?

இந்தத் தீர்மானத்தை தி.மு.க. எதிர்க்கவில்லை. அதன் மூலம் தி.மு.க. தனது வரலாற்றைக் களங்கப்படுத்திக் கொண்டுவிட்டது. இப்படி நெடுமாறன் கூறினார்.

இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அவர் ஒரு வேண்டுகோளும் விடுத்தார்.

இலங்கைச் சமாதான முயற்சிகளை முறியடிக்க முயல்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இலங்கையின் பிரச்சினைக்கு நல்ல தீர்வு ஏற்படவும், சமாதானம் மலரவும் இந்தியா எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (ம)

# மதுவரிப் பரிசோதகர்களை அச்சுறுத்தியதாக முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே23

நாவாந்துறையில் பெரும் கசிப்புக் குகை கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைதான இருவர் மதுவரிப் பரிசோதகர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுத்ததாக யாழ்.நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை யாழ்.நீதிமன்றத்தில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த வழக்கின் இரு எதிரிகளான இளங்கோ, உதயசூரியன் ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர் என்றும் -

இவர்கள் இருவரும் மதுவரிப் பரிசோதகர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தனர் என்றும் -

நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து இருவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-3)

## கடந்த இருவருடங்களில் மட்டும்

# வன்னியில் 18 பொதுமக்கள் வெடிப்பொருள்களால் பலி!

நெடுங்கேணி,மே23

வன்னியில் கடந்த இரு வருடங்களில் பொறிவெடி மற்றும் மிதிவெடிகளில் சிக்கி அப்பாவிப் பொதுமக்கள் 18பேர் உயிரிழந்துள்ளனர் என்று வெண்புறா நிறுவன புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

2000ஆம் ஆண்டில் வெடிப்பொருள் அனர்த்தங்களில் சிக்கி 99பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 15பேர் உயிரிழந்து விட்டனர்.

2001ஆம் ஆண்டில் மேலும் 53பேர் இவ்வாறான அனர்த்தங்களில் காயமடைந்தனர். அவர்களிலும் மூவர் உயிரிழந்தனர்.

- இவ்வாறு அந்த புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வன்னி மீது மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது பல்லாயிரக்கணக்கான வெடிபொருள்களைப் படையினர் புதைத்துவிட்டுச் சென்றுள்ளனர் என்றும் வெண்புறா நிறுவனம் அறிவிக்கிறது. (க)

# பெற்றோல், டீசல் விலைகள் 2 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு,மே23

நேற்றுமுன்தினம் நள்ளிரவுமுதல் சகல எரிபொருள் எண்ணெய்களின் விலை இரண்டு ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இவ்விலையேற்றம் ஒரு மாதகாலத்திற்கு மட்டுமே அமுலில் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. உலகச் சந்தையில் எண்ணெய் விலைகளுக்கான நிர்ணயம், மாதாந்தம் மாற்றம் செய்யப்பட்டு வருகின்றது. இவ்விலை நிர்ணய மாற்றத்துக்கு ஏற்ப இலங்கையிலும் விலைகளில் மாற்றம் செய்யப்படும் எனப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

புதிதாக அறிவிக்கப்பட்ட விலை அதிகரிப்பின் பிரகாரம் ஈயமற்ற பெற்றோல் ஒரு லீற்றர் 55 ரூபாவிலிருந்து 57 ரூபாவாகவும், லங்கா சுப்பர் பெற்றோல் 52 ரூபாவிலிருந்து 54 ரூபாவாகவும், டீசல் 28 ரூபா 30 சதத்திலிருந்து 30 ரூபா 30 சதமாகவும், சுப்பர் டீசல் 33ரூபா 30 சதத்திலிருந்து 35 ரூபா 30 சதமாகவும் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளன.

மண்ணெண்ணெய், மசகு எண்ணெய் போன்ற ஏனைய எண்ணெய் வகைகளும் இதுபோன்று விலை அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### நாளை

வைகாசி 10
வெள்ளிக்கிழமை
(24.05.2002)
திதி : திரயோதசி
முன்னிரவு 9.52 வரை
நட்சத்திரம்: சித்திரை
காலை 6.58 வரை
சுவாதி
வைகறை 5.37 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 5.52 - 7.22
ராகுகாலம்: 10.22 - 11.52
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆணவத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, அமைதியுற்றிருக்கும்போது மனச்சாட்சி பேசுகிறது.

# காதலை ஏற்க மறுத்த மாணவியை குத்திக் கொன்ற சக மாணவன்!

கொழும்பு,மே23

காதலில் தோல்வியடைந்த ஒரு மாணவன் சக மாணவியை பாடசாலையிலேயே வைத்து கத்தியால் குத்திக் கொன்றார். இரத்தம் தோய்ந்த பாடசாலை சீருடையுடன் தப்பியோடிய அம்மாணவர் பின்னர் கைது செய்யப்பட்டார்.



இரத்தினபுரி பகுதியிலுள்ள கிரியெல்ல மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த திங்கள் இச்சம்பவம் நடைபெற்றது.

தனது காதலைப் புறக்கணித்த மாணவியைக் கத்தியால் குத்திய மாணவர், பஸ் ஒன்றில் ஏறித் தப்பியோடினார். ரத்கங்க என்னும் இடத்தில் உறவினர் ஒருவரின் வீட்டில் ஒளிந்திருந்த அம்மாணவர் பின்னர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

கத்தியால் குத்தப்பட்ட துல்மினி இரோஷிகா (19 வயது) என்னும் மாணவி இரத்த வெள்ளத்தில் வீழ்ந்து அதே இடத்திலேயே இறந்தார்.

இச்சம்பவத்தை அடுத்து குறிப்பிட்ட மாணவரின் வீட்டுக்கு அப்பகுதியில் உள்ள ஒரு சிலரால் தீ வைக்கப்பட்டது. தீ வைப்பை அறிந்த பொலீஸார் அங்கு விரைந்து தீயை அணைத்தனர். ஆனால் வீடும் வீட்டுப் பொருள்களும் எரிந்துவிட்டன.

கைதான சந்தேகநபரான மாணவர் இரத்தினபுரி நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, நீதிவான் அவரை அடுத்த மாதம் நான்காம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம)

## உள்ளூராட்சி சபைகளுக்காக நடந்தது

# நீதியான தேர்தல் அல்ல என்கிறார் மகிந்த ராஜபக்ஷ

கொழும்பு,மே23

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெறவில்லை.

இவ்வாறு குற்றஞ்சாட்டி உள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ.

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் பற்றிக் கருத்துத் தெரிவித்த அவர் வாக்களிப்பின் போது பல அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், அரசாங்கத்தின் தேவையற்ற நடவடிக்கையால் பலர் வாக்களிக்கச் செல்லவில்லை எனவும் தெரிவித்தார்.

வன்முறைகள் நிறைந்த இந்தத் தேர்தல் முடிவுகளை மக்கள் நிராகரிக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். (ஐ-12-9)

# இரத்தினபுரி மாநகரசபை லிபரல் கட்சி வசம்!

பலாங்கொடை,மே23

இரத்தினபுரி மாநகர சபை அதிகாரத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவுடன் லிபரல் கட்சி கைப்பற்றியது. இரத்தினபுரி பிரதேசசபையில் ஐக்கிய தேசியக்கட்சி அமோக வெற்றியீட்டியது.

இலங்கை அரசியல் வரலாற்றில் லிபரல் கட்சி உள்ளூராட்சி மன்றமொன்றின் அதிகாரத்தைக் கைப்பற்றியது இதுவே முதல் தடவையாகும். இரத்தினபுரி மாநகரசபைக்கான வேட்புமனு தாக்கலின்போது ஐ.தே.கவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதையடுத்து மாநகரசபை அதிகாரத்தை ஐ.தே.க. மயப்படுத்துவதற்காக லிபரல் கட்சியை ஆதரிக்க ஐ.தே.க. தீர்மானித்தது.

இதன் மூலம் கடந்த இரண்டு தசாப்த காலமாக சுதந்திரக் கட்சி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றின் அதிகாரத்திலிருந்த இரத்தினபுரி மாநகரசபை லிபரல் கட்சி வசமாகியுள்ளது.

அத்துடன் இரத்தினபுரி மாநகர சபை வரலாற்றில் முதன் முறையாக ஜே.வி.பி. உறுப்பினர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

இதேவேளை -

இரத்தினபுரி பிரதேச சபையில் புதிய இடதுசாரி முன்னணி ஓர் ஆசனத்தைப் பெற்றுக்கொண்டிருப்பது விசேடமானதாகும். உள்ளூராட்சி மன்றமொன்றில் புதிய இடதுசாரி முன்னணி உறுப்பினர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளமையும் இதுவே முதல் தடவையாகும். (ஐ)

## உடுப்பிட்டி
## கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலய
## மணவாளக்கோல விழா
## 2002

விநாயக அடியார்களே!

எல்லாம்வல்ல கும்பவாழிப்பதி வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு நிகழும் சித்திரபானு வருஷம் வைகாசி மாதம் 10ஆம் நாள் (24.05.2002) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சுவாதி நட்சத்திர சுப முகூர்த்த வேளையில் *நவோத்திர சகஸ்ர மஹா (1008 சங்குகள்) சங்காபிஷேகம்* நடைபெறும். தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். அடியார்கள் அனைவரும் வருகைதந்து விநாயகப் பெருமானை வழிபாடு செய்து இஷ்ட சித்திகளைப் பெற்றுக் கொள்வதுடன், அன்று நடைபெறும் அன்னதான வைபவத்திலும் கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*உடுப்பிட்டி.* (3966) கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர்.



## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| பூலோகத்தில் | பரலோகத்தில் |
|---|---|
| 26 | 23 |
| – | – |
| 12 | 05 |
| – | – |
| 1945 | 2000 |



கர்த்தருக்குள் நித்திரையடைந்த

### திருமதி பூபாலசிங்கம் பரமேஸ்வரி
(விதியாள்)

*ஆண்டுகள் இரண்டு ஆனாலும் உங்கள்*
*அன்பு எம்மைவிட்டு அகலாது பிரிந்தும்*
*பிரியாத மறைந்தும் மறையாத உங்கள்*
*நினைவுகளில் நாம் என்றென்றும் வாழ்கின்றோம்.*

*சேச் லேன்,*
*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.* (4001) கணவன், மகன்.



# Canadian College of Business & Computers.

Offers
$4 Million
in Scholarships
to study in Canada



The Canadian College of Business & Computers is investing over 4 Million Dollars to build the foundation of human development and PEACE. CCBC has decided to offer Scholarships to Sri Lankan students because we are convinced that they will contribute, in the near future, to strengthen Canada's growing influence in Sri-Lanka. CCBC is pleased to expose young Sri Lankans to a peaceful nation like Canada.

This program is targeted towards all Sri Lankans who have demonstrated plans for higher education. You will undergo a 2 Hour aptitude test followed by an extensive interview conducted by CCBC principals at the BMICH

To be eligible for Scholarship and Admission you will have to score 75% and 60% respectively.

Scholarships will be awarded based on aptitude score, previous academic achievement and evidence of social and community participation.

**Aptitude Test**

Date: June 1st and 3rd
Time: 10:00 am to 4:00 pm

**Interview**

Date: June 4th, 5th and 6th
Time: 10:00 am to 4:00 pm

**Scholarships will be awarded as follows:**

5 Awards of Full Tuition CDN $ 19,000 each.
10 Awards of Partial Tuition CDN $ 17,000 each.
10 Awards of Partial Tuition CDN $ 13,000 each.
80 Awards of Partial Tuition CDN $ 11,000 each.
155 Awards of Partial Tuition CDN $ 9,000 each.
200 Awards of Partial Tuition CDN $ 7,000 each.

The deadline for receipt of completed applications is May 31st, 2002. Please ensure you submit the following documents along with your application to the following address

Scholarship Application & Admission
24 Temple Lane
Colombo 3
Sri Lanka
phone: 507.176

**Scholarship Application Requirements:**

1. School Character Certificate
2. Police Clearance Report
3. Copy of your Passport
4. Copy of your Birth Certificate
5. Copy of your Educational Certificates / Transcripts
6. Employment Letter, if any
7. Proof of sufficient funds for living expenses for two years - ( US $ 10,000) and tuition payment ranging from US $ 1,500 to US $ 8,000 depending on the scholarship award you would receive.
8. Fee of US $13 by Demand Draft in favor of "Canadian College of Business & Computers"

Ready for the challenge? Welcome to Canada for your studies.

WWW.CCBC.CA

Contact Persons: Meena or Violeta
INTERNATIONAL ADMISSIONS OFFICE
phone: 1-416-413-1234
fax: 1-416-413-0314
e-mail: admin@ccbc.ca

Call During 8:00pm - 5:00am Sri Lanka Time

eSTUDIES

"Education is the foundation of Human Development, Security and PEACE"


## நூரளையில் அலுவலகம் மீது தாக்கு!

கொழும்பு,மே23

நுவரெலியாவில் பிரபல தொழிற் சங்கம் ஒன்றின் பிராந்திய அலுவலகம் இனந்தெரியாத குண்டர் கோஷ்டியினால் தாக்கித் தகர்க்கப் பட்டுள்ளது.

மேற்படி அலுவலகம், முன்பு மலையகத்தில் பிரபலமாக இருந்த ஒரு தொழிற் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. எனினும் அச்சங்கத்திலிருந்து பிரிந்துசென்ற அதிருப்தியாளர்கள் இந்த அலுவலகக் கட்டடத்தைக் கைப்பற்றிவைத்திருந்தனர்.

இவ்விவகாரம் பொலீஸ் நிலையத்திற்கும் நீதிமன்றத்திற்கும் கொண்டு செல்லப்பட்டபோது தீர்ப்பும் அதிருப்தியாளர்களுக்கே சாதகமாக அமைந்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த மே தினத்தின்போது அதிருப்தியாளர்களில் ஒருவர் முன்னர் இருந்த சங்கத்துடன் இணைந்துகொண்டார்.

நேற்றுமுன்தினம் அதிருப்தியாளர் குழுவின் முக்கிய பிரமுகர் பழைய சங்கத்தின் தலைமையுடன் சமரசப் பேச்சுகளை நடத்திய வேளையிலேயே அதிருப்தியாளர்களால் கைபபற்றப்பட்ட அலுவலகம் தாக்குதலுக்குள்ளாகியது எனத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக நுவரெலியா பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## கொழும்பில் ரயில்வே ஊழியர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,மே23

ஆறு முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் நேற்று முன்தினம் கொழும்பில் ஆர்ப்பாட்ட இயக்கம் ஒன்றை ஆரம்பித்தது.

வேலைத்தலங்களில் நடத்தப்படும் இந்த ஆர்ப்பாட்ட இயக்கத்தின் முதலாவது ஆர்ப்பாட்டம் மாளிகாவத்தை ரயில்வே கூடத்தில் நேற்று முன்தினம் காலை 8மணிக்கு நடத்தப்பட்டது. 100க்கும் மேற்பட்ட ரயில்வே ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதையடுத்து காலை 8.30 மணியளவில் மருதானை ரயில் நிலையத்திலும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பெரும் எண்ணிக்கையான ஊழியர்கள் அதில் கலந்துகொண்டனர். இரத்மலானை ரயில்வே தொழிற்சாலை, அரசாங்க அச்சகம் ஆகியவற்றிலும் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றன.(ம)

## பாராட்டு விழா

கொடிகாமம் அரசினர் வித்தியாலய முன்னாள் அதிபர் அ.திருநாவுக்கரசின் சேவைநலன் பாராட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திருமதி தெ. துரைச்சாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசன் மற்றும் கொடிகாமம் பளை கோட்டக்கல்வி அதிகாரி இ. கைலாயபிள்ளை ஆகியோரும் கலந்துகொள்கின்றனர். (ம-9)

## தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு!

தென்மராட்சி,மே23

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மீளக் குடியமர்ந்தவர்களில், புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகமும் இணைந்து மேற்கொள்ளும் திட்டத்திற்கான படிவத்தினை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள் தத்தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலரிடம் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு பிரதேச செயலக திட்டமிடல் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ஜ-117)

## 'பென் ரோச் பற்றரி' எடுத்துவந்தவர் கைதானார்

தடை விதிக்கப்பட்ட பென்ரோச பற்றரிகளை ஏ-9 வீதி ஊடாக கொணடு வந்த நபருக்கு சாவகச்சேரி நீதிமன்ற பதில் நீதிவான் 200ரூபா அபராதம் விதித்ததுடன் பற்றரிகளையும் பறிமுதல் செய்ய உத்தரவிட்டார்.

முகமாலை ஊடாக அப்பிள்பழப் பெட்டிகளில் மறைத்து 2ஆயிரத்து 304 பற்றரிகளை (1152 சோடி) கொண்டு வந்த போது கொடிகாமம் பொலீஸாரால் இவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார். (ஜ-117)

# பலஸ்தீனத் தலைவர் ஒருவரின் மகன் குண்டுவெடிப்பில் மரணம்!

## 'மொஸாட்'டின் சதியெனக் குற்றச்சாட்டு

பெய்ரூட்,மே23

லெபனானில் இடம்பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் பிரபல பலஸ்தீனத் தீவிரவாதத் தலைவர் ஒருவரின் மகன் கொல்லப்பட்டார். இந்தக் குண்டு வெடிப்புக்கு இஸ்ரேலின் உளவு அமைப்பான 'மொஸாட்' காரணம் என்று அந்தப் பலஸ்தீனத் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

பலஸ்தீன விடுதலை முன்னணி என்ற தீவிரவாத இயக்கத்தின் நிறுவுநர் அஹமட் ஜிப்ரில் என்பவரின் மூத்த மகனான முஹமட் ஜிகாட் ஜிப்ரில் (வயது40) என்பவரே இந்தக் குண்டுவெடிப்பில் உயிரிழந்தவராவார்.

தலைநகர் பெய்ரூட்டின் மர் எலைஸ் பகுதியில் உள்ள இருப்பிடத்திலிருந்து வெளியே செல்வதற்காக முஹமட் தனது காரில் ஏறி இயக்கியபோதே குண்டு வெடித்ததாகக் கூறப்படுகிறது. சாரதி இருக்கையின் கீழே வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்ததாக லெபனானியப் பொலீஸார் தெரிவித்தனர்.



குண்டுவெடிப்பில் சேதமடைந்த கார்

இந்தக் குண்டுவெடிப்பின் நோக்கம் குறித்த விவரங்கள் வெளிவராத நிலையில் 'மொஸாட் உளவாளிகளின் படுகொலைத் திட்டமே இது' என்று அஹமட் ஜிப்ரில் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆனால், இதனை இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் பினயமின் பென் எலிஸர் நிராகரித்தார். பெய்ரூட்டில் நிகழும் அசம்பாவிதங்கள் அனைத்திற்கும் இஸ்ரேல் மீது பழி போடுவது தவறு என்றும் அவர் தெரிவித்தார்.

இதேசமயம் தனது மகனது மரணத்துக்குப் பழிவாங்க இஸ்ரேலியர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட தனது இயக்கத்தினரை அஹமட் ஜிப்ரில் தூண்டிவிடக்கூடும் என்று கருதப்படுகிறது. (ஒ)

# இந்தியாவும் பாகிஸ்தானும் ஆதரவு திரட்ட முண்டியடிப்பு

லண்டன்,மே23

காஷ்மீரில் இரு தரப்பு இராணுவத்தினரும் தாக்குதல்களைத் தொடர்ந்து நடத்திவரும் அதேசமயத்தில் சர்வதேச இராஜதந்திர ஆதரவைத்திரட்டுவதில் இந்தியாவும் பாகிஸ்தானும் தீவிர நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

உலக நாடுகளுக்கு பாகிஸ்தான் விடுத்துள்ள வேண்டுகோளில், முழு அளவிலான யுத்தம் ஏற்படுவதைத் தடுப்பதற்கென பேச்சை ஆரம்பிக்குமாறு இந்தியா மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

எல்லை கடந்த தீவிரவாதச் செயல்களை பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் நிறுத்தினால் மட்டுமே பேச்சை ஆரம்பிக்க முடியுமென்று இந்தியா சர்வதேச சமூகத்துக்குத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

அதேவேளையில், பாகிஸ்தானிலிருந்து செயற்படும் அடிப்படை இஸ்லாமிய தீவிரவாதிகளே இந்தியாவில் தாக்குதல்களை நடத்திவருவதாக சர்வதேசச் சமூகத்தை நம்பவைப்பதில் இந்தியா கடும் முயற்சி மேற்கொண்டுள்ளது. (ஒ)

# இந்தியாவிலுள்ள பாக். பிரஜைகளை நாடு கடத்துவதற்கு தீவிர நடவடிக்கை

புதுடில்லி,மே23

சட்ட விரோதமாக இந்தியாவில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்களை உடனடியாகப் பாகிஸ்தானுக்கு நாடு கடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக இந்திய உள்துறை இணை அமைச்சர் வித்தியாசாகர் ராவ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் சுமார் 12ஆயிரம் பாகிஸ்தானியப் பிரஜைகள் சட்ட விரோதமாகத் தங்கியுள்ளதாகவும் -

அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து தாயகத்துக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் -

அவர் தெரிவித்தார்.

'இஸ்லாமிய சமயப் பாடசாலைகள், பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ.உளவு விசாரணை அமைப்பு மற்றும் பாகிஸ்தானிய ஆதரவுக் குழுக்களின் நடவடிக்கைகள் மத்திய அரசுக்குத் தெரியும். இவற்றை எவ்வாறு சமாளிப்பது என்று அரசு நன்கறிந்துள்ளது'

இவ்வாறு இணைஅமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஒ)

# அமெரிக்காவில் இந்திய நிறுவனம் 'போலி வயாக்ரா'வை விற்றதாம்!

வாஷிங்ரன்,மே23

அமெரிக்காவில் போலி வயாக்ரா மாத்திரைகளை விற்பனைக்கு விட்ட இந்திய நிறுவனத்தைத் தாம் அடையாளம் கண்டுள்ளதாக அமெரிக்க சட்ட அமுலாக்கல்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வயாக்ரா மாத்திரைகளுக்கு அமெரிக்காவில் பற்றாக்குறை நிலவுவதைத் தெரிந்துகொண்டு, இணையத்தளம் மூலம் விளம்பரம் செய்த மும்பை நிறுவனம், வயாக்ரா மாத்திரை தேவைப்படுவோருக்கு போலி வயாக்ரா மாத்திரைகளை விநியோகித்திருப்பதாகவும் -

இத்தகைய நடவடிக்கையில் சீனா மற்றும் ஹொங்ஹொங்கைச் சேர்ந்த வேறு 4 நிறுவனங்களும் சிறிய அளவில் ஈடுபட்டுள்ளதாகவும் -

அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

வயாக்ராவைக் கண்டுபிடித்த அமெரிக்காவில் போலி வயாக்ரா மாத்திரைகள் அதிகளவில் விற்பனைக்கு விடப்பட்டமை 17 மாதங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளில் 38ஆயிரம் டொலர்கள் மதிப்புக்கு 25ஆயிரம் போலி வயாக்ரா மாத்திரைகள் அமெரிக்காவில் விற்கப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்க மேற்கொள்ளப்பட்ட புலனாய்விலேயே மும்பை நிறுவனம் உள்ளிட்ட 5 நிறுவனங்களை அமெரிக்க அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ளனர். இது தொடர்பாக 7 பேரை அவர்கள் கைது செய்துள்ளனர். (ஒ)

## கோபி அனான் அறிவுரை

லண்டன்,மே22

ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான மோதல் கவலை அளிப்பதாகவும் - இரு நாடுகளும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் - அறிவுரை கூறியுள்ளார்.

இரு நாடுகள் இடையே இப்போதுள்ள நிலைமை தொடர்ந்து நீடித்தால் பதற்றம் மேலும் அதிகரிக்கும். தாக்குதல் நடந்தால் உயிரிழப்புகள் அதிக அளவில் ஏற்படும் எனவும் அவர் கூறியதாக ஐ.நா. சபை செய்தித் தொடர்பாளர் பிரட் எக்கார்ட் கூறியுள்ளார்.

'ஒஸாமா பின்லேடன் உயிருடன் உள்ளார்'

# வெள்ளைமாளிகையில் தீப்பிழம்புகள் கிளம்பும்!

## தலிபான் தலைவர் ஓமர் பேட்டி

லண்டன்,மே23

அமெரிக்காவால் தேடப்படும் இஸ்லாமியத் தீவிரவாதி ஒஸாமா பின்லேடன் இன்னும் உயிருடன் உள்ளதாக தலிபான்களின் ஆன்மீகத் தலைவர் முல்லா முஹமட் ஓமர் தெரிவித்துள்ளார். வெள்ளைமாளிகையில் விரைவில் தீப்பிழம்புகள் கிளம்பும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் முல்லா ஓமர் முதற்றடவையாக லண்டனில் இருந்து வெளியாகும் அஸாக் அல் - அல்சத் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

ஓமர் மேலும் கூறுகையில் -

பின்லேடன் இன்னும் உயிருடன் தான் இருக்கிறார். அதற்காக இறைவனுக்கு நன்றிகூறுகிறேன்.

பின்லேடனைக் கொன்றுவிடுவதாக அமெரிக்க அதிபர் புஷ் அமெரிக்க மக்களுக்கு உறுதியளித்துள்ளார். ஆனால் மனித உயிர் இறைவனின் கைகளில் இருப்பதை புஷ் மறந்துவிட்டார்.

ஆப்கானில் இன்னும் போர் ஓயவில்லை. அது ஒரு புதிய அத்தியாயத்தை மட்டுமே அடைந்துள்ளது.


இஸ்லாத்துக்கு எதிராகப் போர் தொடுத்துள்ள வெள்ளைமாளிகையில் விரைவில் தீப்பிழம்புகள் கிளம்பும்!

என்று கூறியுள்ளார்.

இந்தப் பேட்டி முல்லா ஓமரை நேரில் சந்தித்துப் பெறப்படவில்லை என்றும் -

பத்திரிகையாளர் எழுதி அனுப்பிய கேள்விகளுக்கு, ஓமர் தனது பதில்களை ஒளிநாடாவில் பதிவு செய்து மூன்றாவது நபர் ஒருவர் மூலம் அனுப்பியதாகவும் -

மேற்படி பத்திரிகை தெரிவித்தது. (ஒ)



கம்போடியாவின் ஷனம் பென்னில் பௌத்த மதத் துறவி ஒருவர் மெய்மறந்து புகைப்பிடிப்பதைப் படத்தில் காணலாம்.

புகைத்தலுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட இலங்கை, கம்போடியா, தாய்லாந்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிக்குமார்கள் முன் வந்துள்ள நிலையில் இந்தப் புகைப்படம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. கம்போடியாவில் உள்ள 59 ஆயிரம் பிக்குகளில் 36 வீதமானோர் புகைப்பிடிப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# உதைபந்தாட்ட போட்டியின்போது பிற நிகழ்வுகளை பிற்போடுங்கள்

## ரசிகர்கள் கோரிக்கை

உலகக் கோப்பைக்கான உதைபந்தாட்டப் போட்டியைக் கண்டுகளிக்க வசதியாக பரீட்சைகள், கருத்தரங்குகள் போன்றவற்றை பிற்போடுமாறு உலக நாடுகள் பலவற்றிலும் கோரிக்கைகள் எழுந்துள்ளன.

எதிர்வரும் 31ஆம் திகதி முதல் ஜப்பானிலும், தென்கொரியாவிலும் இந்த உதைபந்தாட்டங்கள் இடம்பெற உள்ளன.

இந்த ஆட்டங்களை தொலைக்

உலக அரங்கில்

காட்சியில் அல்லது நேரடியாகக் கண்டுகளிக்க ஆயிரக்கணக்கான ரசிகர்கள் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றனர்.

இதனால், உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டி நடக்கும் கால கட்டத்தில்,

பரீட்சைகளை பிற்போடும்படி மாணவர்களும் -

நிர்வாகக் கூட்டங்களை ஒத்தி வைக்கும்படி அதிகாரிகளும் -இவைகளைப் போன்றே தாம் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளை பிற்போடும்படி ஏராளமான ரசிகர்களும் - கோரி வருகின்றனர்.

கடந்த உலகக் கோப்பைப் போட்டியின் போது, பங்களாதேஷில் பரீட்சை ஒன்றை பிற்போடும்படி பாடசாலை ஒன்றில் மாணவர்கள் கோரினர். ஆனால், அதனை ஏற்க மறுத்த பாடசாலை நிர்வாகம் பரீட்சையை நடத்தியது.

சுமார் நூறு பேர் தோற்ற வேண்டிய பரீட்சைக்கு வெறும் 12 பேரை வந்திருந்தனர். அவர்களில் அநேகர் விடைத்தாளில் உதைபந்தின் படத்தை வரைந்து விட்டு சென்றிருந்தனர். (ஒ)

## இந்தியாவில் வெப்பத்துக்கு 734பேர் பலி!

இந்தியாவின் சில மாநிலங்களில் அனல் காற்று மற்றும் கடும் வெயிலுக்கு பலியானோர் தொகை 734 ஆக அதிகரித்துள்ளது.

மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஆந்திர மாநிலத்தில் மட்டும் 666பேர் கோடை வெப்பத்தின் கொடுமைக்குப் பலியாகி உள்ளனர்.

வீதியோரங்களில் தங்கியுள்ள மக்களே வெயிலால் அதிகம் பாதிப்படைந்துள்ளதால் அவர்களுக்கு தற்காலிக பாதுகாப்பிடங்கள் வழங்கப்படுகின்றன. (ஒ)

# பல்லாயிரம் பேர் வீதிகளில் இறங்கி ஆர்ஜென்ரீனாவில் ஆர்ப்பாட்டம்!

## இலவச உணவுதரக் கோரிக்கை

பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் ஆர்ஜென்ரீனாவில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் தமக்கு உணவும், வேலையும் தருமாறு கோரி வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் கடைகளை உடைத்துப் பொருள்களைத் சூறையாடுவதாகவும், பொலீஸாருடன் அவர்கள் மோதலில் ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது.

நாட்டில் பரவலாக இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் ஏழ்மையான, வேலையற்ற ஆர்ஜென்ரீனர்கள் இலவச உணவு மற்றும் மருத்துவ வசதிகளை ஏற்படுத்தித்தருமாறு அரசைக் கோரினர்.

இதற்கிடையில் வேலையற்றோரின் வீதம் இருபதாக உயர்ந்தமை மற்றும் ஆர்ஜென்ரீனாவின் பேசோ நாணயத்தின் டொலருக்கு எதிராக பெறுமதி தொடர்ந்து குறைவது ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாட்டின் பிரதான தொழிற்சங்கம் பொது வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் எடுவார்டோ டுகால்டே அதிபராகப் பதவியேற்ற பின்னர் எதிர்கொள்ளும் முதல் போராட்டம் இதுவேயாகும்.

அதிபர் எதிர்கொள்ளும் மற்றொரு பிரச்சினை வங்கி முறைமைகள் ஆகும். நாடு பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டதையடுத்து அங்கு செயற்பட்ட தனியார் வங்கிகள் பலவும் மூடும் நிலைக்கு வந்தன. அவற்றை அரசு வங்கி பொறுப்பேற்றுள்ளது அவ்வாறு பொறுப்பேற்ற வங்கிகளில் வைப்பில் இடப்பட்ட பொதுமக்களின் பணத்தை திருப்பிக்கொடுக்க அரசு திணறிவருகிறது. (ஒ)

## சேவைநலன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

இ.போ.ச.சாரதியான மதிப்புக்குரிய ஏழாலைதெற்கைச் சேர்ந்த

**திரு.சின்னத்தம்பி இராசரத்தினம்** அவர்கள்

இன்று (23.05.2002) வியாழக்கிழமை சேவையிலிருந்து இளைப் பாறுகிறார். யாழ். இளவாலை 788 பேருந்து சாரதியாக அளப்பரிய சேவை யாற்றியமைக்கும், அவருடன் துணை நின்ற நடத்துநர் **திரு.சி. விநாசித்தம்பி** அவர்களையும் நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(3960) - இளவாலை வாழ்மக்கள்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1936 - 01 - 31



விண்ணில் 2001 - 06 - 02

### அமரர் சின்னத்தம்பி துரைச்சாமி

அன்பான அப்பாவே!
பாசத்தின் உறைவிடமே - எங்கள் அப்பா
எப்போது உங்கள் முகம் காண்போம்? - இனி
எப்போது உங்கள் குரல் கேட்போம்? - இனி
கண்மூடி விழிப்பதற்குள் எல்லாம் நடந்து முடிந்தனவோ
சிறப்பிழந்தோம் இல்லத்தில் நீங்கள் போன நாளில் இருந்து
நம் துயர் துடைக்க இனி ஒரு பிறவி எடுக்கமாட்டீர்களா?
ஆலம் விழுதுகள் போல் உறவுகள் ஆயிரம் இருந்தும் என்ன
வேர் என நீங்கள் இருந்தீர்கள் அப்பா?
அநாதைகளான எங்களுக்கு இனி யார் ஆறுதல் அப்பா?

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கின்றோம்.*
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*துர்க்காபுரம்,*
*மல்லாகம்.*
(3811)
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 18 - 12 - 1918



விண்ணில் 23 - 04 - 2002

### அமரர் கார்த்திகேசு முருகப்பா

(இளைப்பாறிய ஆசிரியர்)
திதி: சதுர்த்தசி

*அன்பில் உயிராக ஆனவளம் தந்து*
*என்றுமெங்கள் குடும்பக் குலவிளக்காய்த் திகழ்ந்தினிது*
*எம்மவரின் வாழ்வை இனிதாய் வளம்படுத்தி*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்திட்ட*
*"ஆசானாம்" உங்களை நினைந்து தினந்தோறும்*
*கண்ணீர் மழைசொரிந்து நிற்கின்றோம் உம் ஆத்மா*
*சாந்திபெற இறைவன் தாளினை வேண்டுகின்றோம்!*

*கச்சாய் வடக்கு,*
*கொடிகாமம்.*
(4003) - அன்புடன் குடும்பத்தினர்.


# எதிர்காலத்தை சிறக்க வைக்கும் சக்தி எம் இளைஞர்களின் கரங்களில்தான்!

**தேசிய இளைஞர் தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகின்றது.**

'சர்வவல்லமை மிக்கதோர் இளைஞர் சமுதாயத்தைக் கட்டி எழுப்புதல்' இதுவே இன்றைய உலகின் முதற் கடமையாய் உள்ளது. இளமைப் பருவம் வாழ்வின் சிறந்த காலப்பகுதி. காரியங்கள் ஆற்றுவதற்கு வாய்ப்புக்கள் உள்ள - சவால் நிறைந்த - ஒரு காலப்பகுதியாகும். திறமைகளை வளர்க்க மிகுதியான நேரம் கொண்ட ஒரு வித சுயாதீனம் நிரம்பிய காலப் பகுதியாகும். இது பின்னர் கிடைக்கப் போவதில்லை.

'இளமையில் கருவுற்று முதிர்ச்சி அடைந்ததும் செயலுருவாக்கம் பெற்ற சிந்தனையே அழகிய வாழக்கையாகும்'. இக்கருத்தைச் செயலாக்கவே தேசிய இளைஞர் சேவை மன்றம் உருவாக்கப்பட்டது. இது இளைஞர் விவகார அமைச்சின் கீழ் 1979இல் ஸ்தாபிக்கப்பட்டது. இது கிராம சேவையாளர் பிரிவில் ஒவ்வொரு கழகமும் அவற்றின் கூற்றுப் பிரதேச இளைஞர் சேவை மன்றச் சம்மேளனமும் அவற்றின் கூட்டாக மாவட்ட சம்மேளனமும் அவற்றின் இணையமாக தேசிய இளைஞர் சேவை மன்றமும் செயற்படுகின்றது.

மாவட்ட ரீதியில் - அரச அலுவலக நிலையில் - அலுவலகங்கள் என தேசிய இளைஞர்களை நோக்கி அரவணைக்கின்றது. முதலில் இம்மன்றம் ஆரம்பிக்கப்பட்ட தினமே தேசிய இளைஞர் தினமாகப் பிரகடணம் செய்யப் பட்டுள்ளது. யாழ்.மாவட்டத்தில் 208 மன்றங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

எமது இளைஞர் சமூதாயத்தினர் போரின் கொடுமைக்கும், வறுமை உதவியற்ற சிக்கலுக்கும் உட்பட்டு பினதங்கியவர்களாக உள்ளனர். இவ்வாறு பின்தங்கிய நிலையில் உள்ள இளைஞர், யுவதிகளை தூக்கிவிடுதல், வழிகாட்டுதல், ஏனைய பிரதேசத்தில் வாழும் இளைஞர், யுவதிகளுடன் சமநிலைக்குக் கொண்டுவருதல் ஆகிய பொறுப்பு தகுதி வாய்ந்த ஒவ்வொருவரதும் கடமையாகும். இங்கு இளைஞர்களுக்கு உடல் பலம் மட்டுமல்லாது உளப்பலமும் தேவைப்படுகின்றது.

உளப்பலம் இல்லாதவனால் எந்தச் சமுதாயக் கடலிலும் நீச்சல் அடிக்க முடியாது. இந்த உளப்பலம் தான் தெளிவான குறிக்கோளை நிச்சயிக்க - அதில் அசையாத நம்பிக்கை கொள்ள - விடாமுயற்சியுடன் செயற்படவேண்டிய முனைப்புக்களை அவனுக்கு அளிக்கின்றன. முக்கியமாக, கல்வி என்பது அறிவுக்காக என்ற நிலை மாறி இன்று தொழிலுக்கான ஒரு கடவுச் சீட்டாகவே கணிக்கப்படுகிறது. இதன் விளைவு பெருத்தமற்ற, விருப்பமற்ற கல்வியினூடே வெளித் தள்ளப்பட்டு நிற்கும் இளைஞர்குழாம படித்துவிட்டு பல ஆண்டுகள் உருண்டோடிய பின்னரும் தம் எதிர்கால வாழ்கைக்காக உருப்படியான முடிவேதும் எடுக்கமுடியாத அவல நிலையில் தளப்பட்டு நிற்கிறது. இந்நிலை ஆரோக்கியமானதொன்றல்ல.

இளைஞர்கள் தங்களைத்தாங்களே அறிந்துகொள்ள - தமது ஆற்றல்களை இனங்கான - தமது தனித்துவத்தைப பேணக்கூடிய ஒரு சூழலுக்குள் வந்தாகவேண்டும். இதற்குத் தடையாக உள்ளது தாழ்வு மனப்போக்கு, தயக்கம், வரட்டுக் கௌரவம், பய உணர்வு இவைகள் அவர்களால் தூக்கி எறியப் படல் வேண்டும்; தெளிவானதொரு குறிக்கோளை நிச்சயித்துக்கொள்ள வேண்டும். இந்தக் குறிக்கோளைச் சுற் [illegible] தன்னம்பிக்கை, விடாமுயற்சி, என்ற பண்புகளை அவனால் வளர்த்

## சமுதாயத்தின் மூச்சு அவர்களே!!

துக் கொள்ளமுடியும். மின்மினிப் பூச்சி பறக்கும் போதுதான் பளபள வென்று வெளிச்சம் வருகின்றது. அது போல் ஒருவன் சுறுசுறுப்போடு செயற் படும்போதுதான் பிரகாசிப்பான்.

இளைஞர் பரம்பரை சிறக்க வளமான சிந்தனைகள், செயற்பாடுகள் தேவை. ஒழுக்கசீலரான, தேசப்பற்றுடைய, மனிதாபிமானம் மிக்க சிறந்த பிரஜைகள் உருவாக வேண்டும். இன மதபேதமற்ற வகையில் ஐக்கியம், ஒத்துழைப்பு, நட்புரிமை என்பனவற்றை கட்டிஎழுப்பப்பட வேண்டும். பொருளாதார சமூக, கலாசார அறிவினைப் பெற்று விஞ்ஞான ரீதியாகச் சிந்திக்கும் ஆற்றல்பெறல் வேண்டும். கலை, விளையாட்டு, இயற்கைவளப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தி, தேசிய அபிவிருத்தி தொண்டர் சேவை நடவடிக்கைகளில் இளைஞர்களின் பங்குபற்றலையும் ஆர்வத்தையும் மேம்படுத்த வேண்டும். இவை மட்டுமல்லாது உளவிருத்தி தலைமைத்துவ அபிவிருத்தி என்பவற்றுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி இளம் சந்ததியினரை தலைவர்களாக தயார்ப்படுத்தப்படல் வேண்டும்.

இவையெல்லாம் இளைஞரைச் சார்ந்த சமுதாயம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அதன்கடன். ஓர் இளைஞன் தனது ஒவ்வொரு செயலுக்காகவும் சூழலின் ஏற்றுக்கொள்ளுதல், பாராட்டுதல்களைப் பெற்றுக் கொள்ள விளைகிறான். அவனது இந்த எதிர்பார்புக்களும், ஏக்கமும் ஆரம்பத்தில் பெற்றோரிடமும் அடுத்த கட்டங்களில் ஆசிரியர், உறவினர், நண்பர்கள், அண்டைய வீட்டார், சமூகம் என்று வியாபித்து நிற்கிறது. ஏற்றுக் கொள்ளுதலும் பாராட்டுக்களும் கிடைக்கும போது அவனிடம் சுயமதிப்பும் தன்னம்பிக்கையும் ஏற்படுகிறது.

**மு.தவேந்திரன்**
அமைப்பாளர், யாழ்மாவட்ட
இளைஞர் சேவைகள் மன்ற சம்மேளனம்

எனவே, சர்வவல்லமை மிக்கதோர் இளைஞர் சமூகம் உருவாக, வளர, தன்னைச் சுதாகரித்துக் கொள்ள ஏற்ற சூழலும் உருவாகவேண்டியது அவசியமாகும்.

☆


**Ceylinco Insurance Company Limited**
*Ceylinco Life Centre, 134, Galle Road,*
*P.O.Box 899, Colombo - 3, Sri Lanka.*
*Tel: 438294-5, 424812-5*
*Telegrams: CEYLINCO Fax: (94-1) 437613*
*Website: www.ceylife.lk*

**சிலிங்கோ**
**இன்சூரன்ஸ் கம்பனி (ஆயுள்)**

*இப்பொழுது யாழ்.மண்ணில்*
இலக்கம் 560, ஆஸ்பத்திரி வீதி,
செலான் வங்கி கட்டடம்,
யாழ்ப்பாணம்.

இலங்கை காப்புறுதி வரலாற்றில் முதன்முறையாக 10 மடங்கு காப்புறுதியை வழங்குபவர்கள்.

இப்பொழுதே உங்கள் காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

எங்கள் அலுவலகம் சனிக்கிழமைகளிலும் திறந்திருக்கும்.

(C/22161)



## 80ஆவது அகவைப் பூர்த்தி...

23-05-2002



திருநெல்வேலி கிழக்கு, செங்குந்தா வீதியைச் சேர்ந்த

### திரு.க.நடராசா J.P.

(இளைப்பாறிய ஆசிரியர்)

அவர்கள் தமது எண்பதாவது அகவையைப் பூர்த்தி செய்ததையிட்டு அவரை மேலும் பல்லாண்டு காலம் நலமாக நீடூழி வாழ்க, வாழ்க எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
திரு திருமதி ந.சிவகுமார் குடும்பம் (யாழ்ப்பாணம்)
SAMURTHY MANAGER, DS, NALLUR.
திரு. திருமதி ந.ஜெயகுமார் குடும்பம் (ஜேர்மனி)
திரு. திருமதி ந.ஞானகுமாரன் குடும்பம் (அமெரிக்கா)
திரு. திருமதி நா.இரகுமார் குடும்பம் (யாழ்ப்பாணம்)
(P.H.I; J.M.C)
திரு. திருமதி ந.உருத்திரகுமாரன் குடும்பம் (லண்டன்)

(3996)



## 16ஆவது ஆண்டு நினைவு அஞ்சலி

மலர்வு 1938 - 08 - 19



உதிர்வு 1986 - 05 - 23

### அமரர் மாணிக்கம் மகாலிங்கம் (பாலா)

(உரும்பிராய் வடக்கு)

ஆண்டுகள் பல ஓடி மற்றந்தாலும்
எங்கள் இதயங்களில் குடியிருக்கும்
அன்புத் தெய்வமே உங்கள் பாசமிகு
நினைவுகள் எம்முடன் என்றும் நிலைத்திருக்கும்.

*'குணாவாசம்',*
*84, பொற்பதி வீதி,*
*கொக்குவில்.*
(C/22213)
பிரிவால் துயருறும்:
மனைவி, மகன், மகள்,
மருமகன், உறவினர்கள்.

# நிரந்தர சமாதானம் ஏற்பட்டதும் எம்.பி. பதவியைத் துறப்பேன்!

## சமாதான ரயிலில் சென்ற வண.சமித்த கூறுகிறார்

கொழும்பு,மே23

யுத்தம் முடிவுற்று நிரந்தர சமாதானம் ஏற்பட்டவுடனேயே எம்.பி. பதவியைத் துறப்பேன்.

பௌத்த பிக்குவான வண.பத்தேகம சமித்த இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

சமாதான ரயிலை வரவேற்று வவுனியா ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி கொழும்பில் இருந்து வவுனியா சென்ற இந்த ரயிலில் [illegible] மதத் தலைவர்களு[illegible] வண.பத்தேகம சமித்தவும் பயணம் செய்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

வரப்பிரசாதங்களை அனுபவித்து சுகபோக வாழ்க்கை வாழ நான் நாடாளுமன்றத்தில் இருக்கவில்லை. சமாதானத்துக்காகவும் இந்த கொடூர யுத்தத்தை ஒழிக்கவும் குரல் எழுப்பவே இருக்கிறேன்.

இதற்காக நாம் அனைவரும் எம்மை அர்ப்பணிக்க வேண்டும். கடந்த அரசாங்க காலத்திலும் நாம் இவ்வாறே ரயிலில் வவுனியாவுக்கு பயணம் செய்தோம். வவுனியா மக்கள் சமாதானத்துக்காக குரல் எழுப்பினர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போய்விட்டது - இவ்வாறு அவர் கூறினார்.


ENGLISH
SPOKEN AND GRAMMAR
By: BRITTO
புதிய பிரிவு (சனி, ஞாயிறு)
காலம் : 26.05.2002
இடம் : கொக்குவில் (ஞானபண்டிதர் பாடசாலைக்கு அருகில்)
நேரம் : மாலை 5 (ப. நேரம்)
(C/22247)

பொருளியல் கல்லூரி
இணுவில்.
வணிகக்கல்வி
By. முரளி
A/L 2003
PAPER CLASS
ஆரம்பம் -
24.05.2002 வெள்ளி 3.45
(4062)

NEW SCIENCE HALL
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
2003 A/L DAY CLASS
(2002 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது)
ஆரம்பம்: 24.05.2002 வெள்ளி காலை 7.00 மணி
NEW SCIENCE COLLEGE
வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்.
2003 A/L DAY CLASS
(2002 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது)
ஆரம்பம்: 27.05.2002 திங்கள் காலை 7.00 மணி
(4055)


## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்



### அறிவித்தல்

25.05.2002 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவிருந்த உயர்திருவிழாக்கால தற்காலிக கடைகள், உடை தேங்காய் என்பவற்றிற்கான ஏலம் தவிர்க்கமுடியாத காரணத்தால் 27.05.2002 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு இடம்பெறும் என்பதனை அறியத்தருகின்றேன்.

அன்னையின் சேவையில்
கனக.உருத்திரகுமாரன் B.A.
கௌரவ செயலாளர்,
அறங்காவலர்சபை,
(4066) *நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.*

## கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய பொங்கல் விழா

மேற்படி ஆலயத்தின் வருடாந்த கும்பமடை நாளை (24.05.2002) வெள்ளிக்கிழமை காலை 10 மணிமுதல் நடைபெறவுள்ளது.

01.06.2002ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை வேள்வி இடம்பெறும்.

*குறிப்பு:* இந்த ஆலயத்தைப் புனர்நிர்மாணம் செய்து திருத்தி அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் அதற்கான நிதி உதவி, பொருளுதவிகளை அன்பளிப்பாகத் தந்துதவவும்.

*ஆலயத்திற்குச் செல்லும் பாதை:*
இளவாலை, மெய்கண்டான் வித்தியாலயத்தின் முன் வீதியால் வந்து அண்ணாமார் கோயிலின் பின் பக்கம் மூலம் ஆலயத்தை வந்தடையலாம்.

தகவல்:
மு.செல்லக்குட்டி,
*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*
(4026)
முருகர் செல்லக்குட்டி
ஆதீனகர்த்தா.

## எம்.பி.பி.எஸ். இறுதியாண்டு பரீட்சை முடிவு

யாழ்ப்பாணம்,மே23

யாழ். பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட எம்.பி.பி.எஸ். இறுதியாண்டு பட்டப் பரீட்சை (2002-ஏப்ரல்) முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதலாம் தரத்தில் (First Class) எவரும் சித்தியடையவில்லை.

இரண்டாம் தரத்தில் மேற் பிரிவில் (Second Class - Upper Division) பி.புஸ்பகுமார் என்பவர் சித்தியடைந்துள்ளார். இரண்டாம் தரத்தில், கீழ்ப் பிரிவில் (Second Class - Lower Division) எவரும் சித்தியடையவில்லை.

சாதாரண சித்தி (Pass) பெற்றோர் விவரம் வருமாறு:-

எல்.அல்பிரட் குரூஸ், பி.யூடி ரமேஷ் ஜெயக்குமார், எஸ்.கிருஷ்ணவேணி, என்.நவஜீவன், வி.ராஜினி, என்.சாகுலதா, எஸ்.சியாமளா, எஸ்.சுரேந்ஜித்.

ஈ.உதயகுமார், வி.உதிஷ்ரன், சேவியர் சரத்டானி, எஸ்.புவிராஜசிங்கம், கே.பாலசுப்பிரமணியம், என்.ஹேமா, எம்.துளசிகா.

எம்.பி.பி.எஸ். இறுதியாண்டுப் பரீட்சையில் சித்திபெற்ற (Pass) வட இலங்கை மருத்துவக் கல்லூரி (N.L.M.C.) மாணவர்கள் விவரம் வருமாறு:-

ஏ.எம்.ஜே.ஜி.எம். சித்தீக் அலி, கே.ஜெயசுந்தரம், ஏ.எல்.எம்.முபாரக். (எ)

## புனரமைப்புக்கு நிதி ஒதுக்கீடு

காரைநகர் தில்லைமயானத்தில் உள்ள அந்தியேட்டி மடத்தினை புனரமைப்புச் செய்வதற்காக இந்து கலாசார அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

காரைநகர் விளானை கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட உள்ள இந்தப் புனரமைப்புப் பணிக்கு 3லட்சம் ரூபா நிதியினை இந்து கலாசார அமைச்சு வழங்கவுள்ளது. (ம-73)


BARATHY
சித்தன்கேணி.
A/L 2004
கலை – வர்த்தகம்
புதிய பிரிவு
ஆரம்பம் ~ 25.02.2002 சனி
Eco. - சண்
Acc. - முகுந்தன்
Com. - பசில்
Lo.Sci. - R.P.சர்மா
Tam. - பாலா
H.c. - சுரேஸ்
H.M. - தரன்
Geo. - குமரன்
R.C. - வசந்தன்
Dra. - சுதன்
Eng. - விஜயபாஸ்கர்
Note:- மேற்குறிப்பிட்ட பிரசித்தி பெற்ற ஆசிரியர்கள் சித்தன் கேணியில் வேறு கல்வி நிறுவனங்களில் கற்பிக்கமாட்டார்கள்.
(4063)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று மட்டும்
சரத்குமார், அபிராமி நடித்த
சமுத்திரம் (கீலஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (புதிய நேரம்)
நாளைமுதல் கன்னத்தில் முத்தமிட்டால்
(4046)

ராஜா யாழ்ப்பாணம்
6ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
தமிழன்
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/22146)

நிரஞ்சனாஸ்
சங்கானை
LEONARD DIC APRIO
KATE WINSLET
டைட்டானிக்
(தமிழாக்கம்)
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-22147)


# உடதலவின்ன படுகொலைகள்: விசாரணை 3ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

உடதலவின்ன முஸ்லிம் இளைஞர்கள் படுகொலைகள் சம்பந்தமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தாக்கல்செய்த மனு நேற்று தெல்தெனியா நீதிவான் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

வழக்கு இன்னமும் பூர்த்தியடைந்துவிடவில்லை என்றும் இன்னும் சில சந்தேகநபர்களைக் கைதுசெய்யவேண்டியிருக்கிறது என்றும் அரச சட்டவாதி நீதிமன்றத்தில் தெரிவித்தார். சம்பவம் தொடர்பாகக் கைப்பற்றப்பட்ட வாகனம் இச்சம்பவத்தில் தொடர்புடையது என்பதற்கான ஆதாரம் இல்லை என்றும் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

எனவே அந்த வாகனத்தைப் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

அனுருத்த ரத்வத்தை, லொகான ரத்வத்தை உட்பட 17சந்தேகநபர்கள நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். சுகவீனம் காரணமாக சானுக்க ரத்வத்தை நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

மேல் விசாரணைகள் எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டன. (ஐ)


அறிவொளி NALLUR.
PHYSICS
ம.ஸ்பெல்மன்
ஒட்ட மின்னியல்
ஆரம்பம்: 25-05-2002
Sat., Sun. 3.00 - 4.00
(1034)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்லையா தங்கம்மா

நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா தங்கம்மா அவர்கள் நேற்று (22.05.2002) புதன்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா (றெயில்வே காட்) அவர்களின் அன்பு மனைவியும், தனலட்சுமி, தில்லைநாதன், றங்கநாதன் (ஆஸ்திரேலியா), சிவநாதன் (ஆஸ்திரேலியா), குகநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனபாலசிங்கம், தவபாக்கியம், தர்சினி, கமலா, வசந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், மயூரன், குருபரன், சுகந்தினி, அரவிந்தன், முகுந்தன், ரேகா, டினேஸ், சிவமீரா, சிவமித்திரா, சிவோதயன், ரம்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.05.2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.40,றெயில்வே கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

தகவல்:
செ.தில்லைநாதன் (மகன்)
வை.தனபாலசிங்கம் (மருமகன், C.T.B.)
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.
(4061)

## சிவகுரு செல்லத்துரை

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஓய்வுபெற்ற ஆசிரியருமான சிவகுரு செல்லத்துரை அவர்கள் நேற்று (22.05.2002) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடராஜா மற்றும் பாலசிங்கம் (கனடா), கதிரவேலு (ஏழாலை), பவளம், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும், சந்திரகுமாரன் (தாதிய உத்தியோகத்தர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை) சந்திரமோகன் (சுவீடன்), சந்திரஉதயன் (கனடா), சந்திரரூபன் (லண்டன்), சந்திரவதனா (யாழ்ப்பாணம்), சந்திரராஜன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கைலேஸ்வரி (மாசியப்பிட்டி), கலைவாணி (சுவீடன்), சர்மினி (கனடா), கிருபாகரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் விதூசிகன், தனூசிகன், அபிதா (சுவீடன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாசியப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாசியப்பிட்டி சந்தி, சண்டிலிப்பாய்.*
(4051)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## தாமு கந்தசாமி

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமு கந்தசாமி நேற்று (22.05.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராசலட்சுமியின் அன்புக் கணவரும், வசந்தி (ஜேர்மனி), விஜயபாஸ்கரன், தேவமனோகரன் (கனடா), ஸ்ரீகரன் (ஜேர்மனி), ஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் விஜயானந்தராஜா (ஜேர்மனி), ஜெயகலா, புவனகுமாரி (கனடா), சுகந்தி (ஜேர்மனி), காலஞ்சென்ற யோகநாதன் ஆகியோரின் மாமனாரும் விஜியந்தா, வினோஜன், விஜேயா, விஜிதன், கதீசன், நிரோசன், சாரூன், சசீபன், கிரோபிகா, விதுசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.05.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சரசாலை கொம்பிகுளம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரசாலை வடக்கு, சாவகச்சேரி.*
(4058)

தகவல்:
க.இராசலட்சுமி (மனைவி)
க.பாஸ்கரன் (மகன்)

## திருமதி பொன்னம்மா சுப்ரமணியம்

காரைநகர், வழுப்போடை, களபூமியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா சுப்ரமணியம் நேற்று (22.05.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - சுந்தரம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை, காலஞ்சென்ற ஆறுமுகம், சண்முகம், கந்தையா, தங்கராசா ஆகியோரின் அருமைச் சகோதரியும், சபாரட்ணம் (வர்த்தகர், பாணந்துறை), விமலச்சந்திரன் (வர்த்தகர், பாணந்துறை), இராமன் (வர்த்தகர், கண்டி), இலட்சுமணன் (ஆசிரியர், யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.05.2002) வியாழக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு மகனின் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*410,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.*
(C22267)

தகவல்:
சு.இலட்சுமணன் (மகன்)

# அமைச்சர் ஆறுமுகம் இன்று வருகிறார்

யாழ்ப்பாணம்,மே23

வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

இன்று பிற்பகல் 2மணிக்கு யாழ். செயலகத்தில் திணைக்களத் தலைவர், பிரதேச செயலர்களைச் சந்தித்துப் பேச்சுநடத்தும் அமைச்சர், பிற்பகல் 4மணியளவில் சாவகச்சேரிக்கு விஜயம் செய்து அங்கு மீளக்குடியமர்ந்துள்ளவர்களுக்கு கூரைத் தகடுகளை வழங்குவார்.

பின்னர் நாவற்குழி, குருநகர் வீட்டுத் திட்டங்களைப் பார்வையிடுவார். தொடர்ந்து யாழ் நாகவிகாரை, ஜும்மா பள்ளிவாசல், ஆயர் இல்லம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்வார்.

நாளை வெள்ளிக்கிழமை நல்லை ஆதீனம், நல்லூர் கந்தசுவாமி ஆலயம், நயினாதீவு நாகவிகாரை ஆகியவற்றுக்கு விஜயம் செய்யும் அமைச்சர் அன்று மாலையே கொழும்பு திரும்புவார். (எ-8)

## பஸ் கட்டணம் உயரும்

கொ[illegible]மே23

தனியார் பஸ் [illegible] அதிகரிக்கப்படும். கட்[illegible] அதிகரிக்கும் அவசியம் ஏற்பட[illegible]கிறது என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவரான கெமுனு விஜேரத்ன நேற்றுத் தெரிவித்தார்.

கட்டண உயர்வுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

எரிபொருள்களின் விலை உயர்ந்து வருவதையடுத்தே பஸ் கட்டணங்களை அதிகரிக்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஐ)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யினரால் கைதுசெய்யப்பட்ட முதல் நாள் பல்வேறு சித்திரவதைகளுக்கும் உள்ளானதாக சம்பந்தப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர் நீதிமன்றில் தெரிவித்தார்.

இதனை அடுத்து, இந்தத் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து திருக்கோயிலில் நேற்றுமாலை கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களைக் கலைக்க அதிரடிப்படையினர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர். இதனால் சிறுவன் ஒருவன் உட்பட இருவர் படுகாயமடைந்தனர். (எ-12)

## ஜனாதிபதியை பிரதமர் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,மே23

சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து ஜனாதிபதியும் பிரதமரும் நேற்று ஒன்றரை மணி நேரம் பேச்சு நடத்தியுள்ளனர்.

ஜனாதிபதியைச் சந்தித்த பிரதமர் நோர்வேயின் அனுசரணை முயற்சியால் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், புரிந்துணர்வு உடன்பாட்டின் அமுலாக்கம் ஆகியன தொடர்பாக விளக்கிக் கூறியுள்ளார்.

இந்தியா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குத் தாம் மேற்கொள்ளவுள்ள விஜயம் குறித்தும் பிரதமர் ஜனாதிபதியிடம் பிரஸ்தாபித்தார். (ஐ-3)

## 150 ஆபாச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் நிலையப் பகுதியிலும், பிற்பகல் 4 மணிக்கு சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியிலும் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் தீயிட்டு அழிக்கப்படவிருக்கின்றன என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3)

## வவுனியாவில் கண்காணிப்புக்குழு கூட்டம்

வவுனியா,மே23

வவுனியாவில் இராணுவத்தினரும், பொலீஸாரும் நிலைகொண்டுள்ள பாடசாலைகள், தனியார் வீடுகள், அரச கட்டடங்கள், தனியார் கட்டடங்கள் முதலானவற்றிலிருந்து அவர்கள் விலகிச் செல்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக்காலை வைரவப்புளியங்குளத்தில் அமைந்துள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜிக்கா பொலனன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் வன்னிப்பிராந்தியப் பொலீஸ் மா அதிபர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், ராஜா குகநேஸ்வரன், விடுதலைப் புலிகள் சார்பில் எழிலன், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், உள்ளூர் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-12)

## லண்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வார இறுதியில் சுவிஸுக்கு விஜயம் செய்து அந்நாட்டு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகத் தெரியவருகிறது. அவரது விஜயத்தைத் தொடர்ந்தே அன்ரன் பாலசிங்கமும் அங்கு அழைக்கப்பட்டிருப்பதாக உறுதிப்படுத்தப்படாத தகவல் ஒன்று தெரிவித்தது.

அன்ரன் பாலசிங்கத்தின் சுவிஸ் விஜயம் தற்போதைய சமாதான முயற்சிகளுடன் தொடர்புடையது என்று நம்பப்படுவதாக ஐரோப்பிய தமிழ் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# இடைக்கால நிர்வாகம் பற்றி ஜனாதிபதியின் நிலைப்பாடு

கொழும்பு,மே23

நடைபெறவுள்ள விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்கள் முக்கிய கட்டத்தை அடைந்த பின்னரே இடைக்கால நிர்வாகத்தை அவர்களிடம் வழங்குவது தொடர்பாக அரசாங்கம் ஆராய வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

[illegible]வதேச நாணய நிதியத்தின் உறுப்பினர்களை நேற்றுமுன்தினம் கொழும்பில் சந்தித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு குறுக்கே நிற்கப் போவதில்லை. பிரதமரின் முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவேன் - எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஐ-12)


பாராட்டுகிறேன்

எம் கல்வி உயர்வும் வித்தியாலயத்தின் வளர்ச்சியுமே தன் உயிர் மூச்சு எனக்கொண்டு அயராது சேவை செய்த எம் மதிப்புக்குரிய பேரதிபர்

திரு. அ. திருநாவுக்கரசு

அவர்களுக்கு சேவைநலன் பாராட்டு விழா எடுக்கும் இந்நாளில் அவரைப் பல நலனும் பெற்று நீடூழி வாழ்க என வாழ்த்துவதில் பேருவகை அடைகின்றேன்.

ச.தேவகி,
(யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலய பழைய மாணவி)

(3981)



எல்லைகள் கடந்து




நுட்பங்கள் தேடி

புதிய பிரிவுகள்

Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Dip. in Hardware
Dip. in Software Management
Dip. in Software Developing
& Certificate Courses

முதல் பிரிவு
25-05-2002
காலை 10.00 மணி

A/L மாணவர்களுக்கு விசேட கட்டணங்கள்

மேலதிக விபரங்களிற்கும், பதிவுகளுக்கும்
Director

STP Your Partner in IT Solutions
54A, Palaly Road, Jaffna T.P: 2674, E.mail: stpedu@slt.lk



வரவேற்பாளர் - (பெண்கள் மட்டும்)

வரவேற்பாளராகப் பணிபுரிய 25இற்கும் 30இற்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் தேவை.

ஜி.சீ.ஈ. உயர்தரம் சித்தியடைந்திருக்கவேண்டும். முன் அனுபவமும், ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் உரையாடும் ஆற்றலும் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.

யாழ்நகர எல்லைக்குள் வசிப்பவர்கள், தங்கியிருப்பவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

கல்விச் சான்றிதழ்கள், சொந்தக் கையெழுத்தில் தயாரித்த விண்ணப்பம் ஆகியவற்றுடன் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நேரில் வரவும்.

உதயன் - சஞ்சீவி பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/22268)



VICKNAA INSTITUTE

பிரிவு II
A/L 2004
கணக்கீடு
திரு. பாலவாசன்
B.B.A. (F.M.Spl.)
O/L இல் கணக்கீட்டு அறிவினைப் பெற்றிராத மாணவர்களுக்கான
புதிய பிரிவு
Sat., Sun.→9-10 a.m.
ஆரம்பம்:
25.05.2002→Sat.→9 a.m.
(4054)



BEACON
யாழ்நகர்.
English
G.A.Q. Spoken
By: BRITTO
ஆரம்பம்:
25-05-2002 சனி 2 மணி
(4049)



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
குணால், மோனல்
நடித்த
※ பேசாத கண்ணும் பேசுமே ※
(பிரதிகள் உடன் பெறலாம்)
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/22269)



எமது புதிய
வீடியோ CD வெளியீடு
குணால், மோனல்
பேசாத கண்ணும் பேசும்
(கணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது)
ITN வீடியோ ஓடியோ
மியூசிக் சென்ரர்.
பலாலி வீதி, பரமேஸ்வராசந்தி.
(C/22245)



விமாகி (VEMAKE)

செரமிக் பொருள்களின் 25 வருடகால யாழ்ப்பாண ஏக விநியோகஸ்தர்கள்
Lanka Tiles, Lanka wall Tiles, Lanka Ceramics

- கொமேட் செற் Commode Set
- குளியலறை சாதனங்கள் Sq/pan
- வோஸ் பேசின் Wash Basin, Pedestal Basin
- சமையலறை தொட்டிகள் Kitchen Sink, Lab Sink, Steel Sink
- குளியலறை கண்ணாடிகள் Bathroom Mirrors
- நில மாபிள் Floor Tiles (Lanka)
- சுவர் மாபிள் Wall Tiles
- நில விரிப்புகள் Lenonium ஆகியவற்றிற்கும்

சீனாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அன்பளிப்புப் பொருள்களும் செரமிக் பொருள்கள் Bathroom Fittinges Glass வகைகள் இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்

- ரீ செற் Tea Set
- டினர் செற் Dinner Set
- கப் & சோசர் Cup & Saucer
- கிளாஸ் பல அளவுகளில்
- கிளாஸ் பிளேற் Glass Plates
- செரமிக் பிளேற் Ceramic Plates
- பெற்றோ மாக்ஸ் Petro max
- அரிக்கன் லாம்பு
- அரிக்கன் லாம்பு சிமிலி
- சமையலறைத் தட்டுகள் Kitchen Rack

ஆகியவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள யாழ்நகரில் நாடவேண்டிய ஸ்தாபனம்

விமாகி



Note:- கூட்டுறவுச் சங்கங்கள், கோயில்கள், பாடசாலைகள் என்பவற்றுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
(போலி முகவர்களை நம்பவேண்டாம்)

யாழ்நகரில்
விமாகி
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

தலைநகரில்
விமாகி
51, டாம் ஸ்ரீற்,
கொழும்பு - 12.

(4004)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.